விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 தை 10 திங்கட்கிழமை (23..01.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 35

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## பாலா-எரிக்சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வருகை



(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இன்று இலங்கை வருகின்றனர்.

தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வழிமுறைகள் குறித்து முடிவெடுப்பதற்காகவே இருவரும் இன்று கொழும்பு வருகின்றனர்.

கொழும்புக்கு இன்று காலை வருகை தரும் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அவரது பாரியார் அடேல் பாலசிங்கமும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேரடியாக உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளனர்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் (12ஆம் பக்கம் பார்க்க)



## பதுங்கியிருந்து தாக்கியதில் 4 அதிரடிப் படையினர் காயம்

(அம்பாறை)

அம்பாறை அக்கரைப்பற்று சாகாமம் வீதி கண்ணகிபுரத்தில் அடையாளம் தெரியாத நபர்கள் பதுங்கியிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 4 விசேட அதிரடிப்படையினர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் இடம் பெற்றுள்ளது. வழமைபோன்று பகல் நேரக் கண்காணிப்பை முடித்துக் கொண்டு முகாம் திரும்பிக்கொண்டிருந்த விசேட அதிரடிப் படைச் சிப்பாய்கள் மீதே வீதியில் வைத்து இத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இதனிடையே பொது மக்கள் கொடுத்த தகவலை (12 ஆம் பக்கம் பார்க்க)

# நேரடிப் பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி மீண்டும் அழைப்பு!

## பேச்சுக்கான இடம் குறித்து அறிவிப்பு இல்லை

(கொழும்பு)

உடனடியாகப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு தமிழீழ விடுதலைப்புலிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பகிரங்க அழைப்புவிடுத்துள்ளார்.ஆனால் தனது பொறுமையை விடுதலைப்புலிகள் தனது பலவீனத்திற்கான சமிக்ஞை என்று தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினை மறு ஆய்வு செய்வதற்கு ஒரு வழியினை காணும் முயற்சியாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் இன்று வருகை தரவுள்ள நிலையில் ஜனாதிபதியின் இக்கருத்து வெளிவந்திருக்கிறது. (12ஆம் பக்கம் பார்க்க)

## கிரனைட் வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சுனப்பு ஓடையில் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றிரவு 7.30 மணியளவில் இத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இத் தாக்குதலையடுத்துபொலிஸார் அப் பகுதிகளை சுற்றிவளைத்து தேடுதலில் ஈடுபட்டனர். (ச)

## நுவரெலியா-ஹட்டன் பகுதிகளில் பொலிஸார் நேற்று சுற்றிவளைப்பு

### 88 பேர் கைது;பலர் விடுதலை

நுவரெலியா ஹட்டன் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட சுற்றி வளைப்புத் தேடுதல்களில் 88 பேர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவில் நேற்றுக் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நடத்தப்பட்ட சுற்றி வளைப்புத் தேடுதலில் 25 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக மத்திய பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் விமல் ஆரியரத்ன கூறியுள்ளார்.

12 பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். நுவரெலியா நகரில் உள்ள சகல வர்த்தக நிலையங்களும் வீடுகளும் சோதனை (12ஆம் பக்கம் பாக்க)



யாழ்.குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து நேற்று வன்னி சென்ற மக்களில் ஒரு தொகுதியினர்...

## போர் நிறுத்த ஒப்பந்தம் நாட்டைப் பிளவுபடுத்தாது

### ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் எந்த வகையிலும் நாட்டைப் பிளவுபடுத்தாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மூலமே பிளவுபடாத இலங்கையை நாம் காணக் கூடியதாக இருக்கும். ஆகவே இந்தக் காலக் கட்டத்தில் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் தன்மையை சகல இலங்கையர்களும் உணர்ந்து அதனை (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று 200 குடும்பங்கள் இடம்பெயர்வு

(கிளிநொச்சி)

யாழ்.குடாநாட்டிலிருந்து நேற்று மட்டும் 200 குடும்பங்கள் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்துள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அச்சம் காரணமாக தொடர்ந்து மக்கள் கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. நேற்றுக் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையும் 200றக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

அவ்வாறு கிளிநொச்சிக்குச் செல்லும் மக்களுக்கு சமைத்த உணவுகள் போக்குவரத்து வசதிகள் (12ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.

எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# சமஷ்டி நிர்வாக ஆட்சியை ஏற்படுத்துங்கள் வணிகத் தலைவர்கள் அரசிடம் வேண்டுகோள்

பல தசாப்தங்களாக நீடித்து வரும் இலங்கையின் இனப்பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு இலங்கை வணிகத் தலைவர்கள் நாட்டை சமஷ்டி நிர்வாக ஆட்சியாக மாற்றுமாறு அரசாங்கத்தினைக் கேட்டுள்ளனர்.

சுதந்திர தமிழீழத்திற்கு போராடி வரும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக இந்திய சமஷ்டி முறைமையை ஒரு முன் மாதிரியாகக் கொள்ளமுடியும் எனவும் வணிகத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய முன்மாதிரியில் அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கம் முன்மொழியப்படுகின்றது. இது ஐக்கிய அல்லது ஒன்றையாட்சி நாடு என்ற வரையறைக்குள் கட்டுப்படுத்தப்பட்டதல்ல என அவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிக்கலான இந்தப் பிரச்சினை பற்றிய பல்வேறு கண்ணோட்டங்களுடனும், இந்த ஆக்கபூர்வமான வழி இது எனவும் நாம் கருதுகின்றோம்.

சமாதான பேச்சுகளை உடன் ஆரம்பிப்பதற்கு நோர்வே சமாதான அனுசரணையாளர்களினால் மேற்கொள்ளப்படும் இராஜதந்திர நகர்வுகளுடன் சம்பந்தப்பட்டதாகவே இந்தக் கூட்டறிக்கை வெளிவந்துள்ளது.

அதிகபட்ச தன்னாட்சிக் கோரிக்கைக்கு சமஷ்டிமுறை ஆட்சியே தீர்வாகும் என டிசம்பர் மாதம் 2002ஆம் ஆண்டில் அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தமை தெரிந்ததே.

ஆனால் கடந்த நவம்பர் மாதம் பதவிக்கு வந்த புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வாக சமஷ்டி முறைமையினை எதிர்த்து தமிழர்களுக்கு விரிவான அதிகாரப் பகிர்வினை வழங்க இணங்கியமை குறிப்பிடத்தக்கது. (க)

## ஹர்த்தால் கைவிடப்பட்டது

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று அட்டாளச்சேனை மற்றும் ஆலையடி வேம்பு ஆகிய பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக அனுஷ்டிக்கப் பட்டுவந்த ஹர்த்தால் நேற்று முன்தினமுடன் கைவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பிரதேசங்களில் வழமைநிலை திரும்பியுள்ளது. (க-4)

## பொறளையில் 20பேர் கைது

கொழும்பு பொறளை பிரதேசத்தில் நேற்றுக்காலை பொலிஸாருடன் இராணுவத்தினரும் இணைந்து இரண்டு மணி நேரம் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில் 20பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்திலும் வீதித்தடை அமைக்கப்பட்டு படையினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-9)

# ஜெனீவாவில் அமைதிப் பேச்சுகளென நோர்வே பரிந்துரைக்கும்?

(கொழும்பு)

இலங்கை அமைதிப் பேச்சுக்களை சுவிஸ் தலைநகர் ஜெனீவாவில் நடத்தலாம் என அனுசரணையாளராகிய நோர்வே நாடு பரிந்துரைக்கக்கூடும் என்று தெரிகிறது.

இலங்கைக்கு இன்று வருகை தரவுள்ள நோர்வே அமைச்சரும் சிறப்புத் தூதுவருமான எரிக்சொல்ஹெய்ம் விடுதலைப்புலிகளுடனான சந்திப்பின் போது இந்த பரிந்துரையை முன்வைக்கக்கூடும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொள்கை வகுப்பாளர்கள் ஊடாக ஜெனீவா பேச்சுக்கு ஒப்புக்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

இந்த யோசனையை விடுதலைப்புலிகளும் ஏற்கக்கூடும் என்று நோர்வே மற்றும் அரச தரப்பினர் எதிர்பார்ப்பதாக கொழும்பு கொள்கை வகுப்பாளர்கள் கூறியுள்ளனர்.

மேலும் யுத்தநிறுத்த அமுலாக்கம் தொடர்பான பேச்சுகளுக்கு முன் நிபந்தனையான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்தான ஆயுதக்குழுக்களின் ஆயுதக் களைவு தொடர்பில் விடுதலைப் புலிகள் வலியுறுத்தக்கூடும் என்றும் அரச தரப்பினர் எதிர்பார்க்கின்றனர். இருப்பினும் இது தொடர்பில் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து எதுவித தகவல்களும் உறுதிப்படுத்தப்படவில்லை. (து)

## நேரக் கணிப்பாளர்கள் கைது

புறக்கோட்டை பஸ்நிலையத்தில் இலஞ்சம் வாங்கிக் கொண்டிருந்த மூன்று நேரக்கணிப்பாளர்களை இலஞ்ச ஊழல் மோசடிகள் புலனாய்வுப் பிரிவினர் கடந்த வியாழக்கிழமை இரவு மடக்கிப் பிடித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாக இலஞ்ச ஊழல் மோசடிகள் விசாரணைக் குழுவின் புலனாய்வுப் பிரவின் பணிப்பாளர் தெரிவித்தார்.

பஸ் டிப்போக்களில் பணிபுரியும் நேரக்கணிப்பாளர்கள் பஸ் சாரதிகளையும், நடத்துநர்களையும் அச்சுறுத்தி இலஞ்சம் பெற்று வருவதாக அநுராதபுரம், வவுனியா, கண்டி, காலி, மாத்தறை குருநாகல், கொழும்பு ஆகிய பஸ் டிப்போக்களிலிருந்து எமக்கு அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

புறக்கோட்டை பஸ்டிப்போவிலிருந்து தூர இடங்களுக்குச் செல்லும் மூன்று வெவ்வேறு தனியார் பஸ் நடத்துநர்களிடம் இலஞ்சம் பெற்றுக்கொண்டிருக்கும்போதே இலஞ்ச ஊழல் மோசடிகள் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளால் இவர்கள் தனித்தனியாக கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (து-8)

## இராசி பலன்

**23.01.2006**
**(தை 10, திங்கட்கிழமை)**
**நவமி பின்னிரவு 5.15 மணிவரை**
**சுவாதி பிற்பகல் 2.43 மணிவரை**
**இராகுகாலம் 8.06-9.36 மணிவரை**
**சுபநேரம் 12.36-2.06 மணிவரை**
**அமிர்தம்**

| | |
|---|---|
| மேடம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும், போசனசுகம். |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், புதிய திருப்பம், தூரதேசச் செய்தி, பகைவர் நேசம். |
| மிதுனம் | வியாபார சிந்தை, அதிக முயற்சி, பணவிரயம், பெரியோர் வெறுப்பு. |
| கடகம் | மனச்சஞ்சலம், கல்வியில் ஆர்வம், ரோகநிலை, சுபசெலவு. |
| சிங்கம் | அன்னியர் சந்திப்பு, நல்ல தகவல், குடும்ப சுகம், உற்சாகம். |
| கன்னி | கடினவார்த்தை, அதிகசெலவு, குடும்ப சுகம், முயற்சி கைகூடும். |
| துலாம் | போசன சுகம், புதிய முயற்சி, சுபசெலவு, கற்பனை மிகுதி. |
| விருச்சிகம் | உறவினர் மனஸ்தாபம், காரிய அலைச்சல், அதிகாரிகள் ஒத்துழைப்பு, போசனநன்மை. |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், பாராட்டு, பொருள் சேர்க்கை, குடும்ப சுகம். |
| மகரம் | அதிகாரம், புதிய தகவல், கடின முயற்சி, விருந்துபசாரம். |
| கும்பம் | புதிய திட்டமிடல், பிரயாணம், சரீரப்பிரயாசை, காரிய தாமதம். |
| மீனம் | திடீர் நன்மை, முயற்சி தடங்கல், உடல் நலக்குறைவு, வீண்பகை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
\- வளவன்

## 1500 கோடிரூபா செலவில் இரட்டை ரயில் பாதை

1500 கோடி ரூபா செலவில் இரட்டை ரயில்பாதை அமைப்பதற்கான வேலைகள் எதிர்வரும் மார்ச் மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. கொழும்புக்கும்- மாத்தறைக்கும் இடையிலான் இப்பாதையை அமைப்பதற்கு இந்திய அரசு நிதியுதவியை வழங்க இருக்கிறது.

அல்கமவுக்கும்- கொழும்புக்கும் இடையிலான தற்போதைய ரயில் பாதையில் ரயில் நிலையங்களும் முதலாவது கட்டத்தின் கீழ் நவீன மயப்படுத்தப்படும். அல்கமவுக்கும்- மாத்தறைக்கும் இடையே ரயில் பாதை அமைப்பதற்கான காணிக் கொள்வனவு மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (சு-7)

## சகல நீதிமன்றங்களுக்கும் அருகாமையில் சட்ட உதவி நிலையம் நிறுவப்படும்

நாட்டில் இயங்கி வரும் சகல நீதிமன்றங்களுக்கும் அருகாமையில் சட்ட உதவி நிலையங்களை நிறுவுவதற்கு இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. குறைந்த வருமானம் பெறுவோருக்கு சட்ட உதவி வழங்குவதே இதன் முக்கிய நோக்கமென்று ஆணைக் குழுவின் தலைவர் எஸ்.எஸ்.விஜயரத்தின தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் சனத்தொகையில் 40 வீதத்தினரின் ஒருமாத வருமானம் 6 ஆயிரம் ரூபாவிற்கு குறைவாகவுள்ளது.

இதன் காரணமாக குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு இலவசமாக சட்ட உதவிவழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. இத்தகையவர்ளுக்கு சட்ட உதவி வழங்க முன்வருவது அரசாங்க சட்டத்தரணிகளின் கடமை எனவும் இதுவரை 18 சட்ட உதவி நிலையங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் திறக்கப்பட்டுள்ளது. எனவும் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

## தனியார்துறை ஊழியருக்கு வீடமைப்புக் கடன்திட்டம்


தனியார் துறை ஊழியர்களுக்கென வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி வீடமைப்பு கடன் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்தவர்களாக உள்ளவர்கள் இக் கடன் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். சிரமதய என்று பெயரிடப்பட்ட இக் கடன் திட்டத்தின்கீழ் ஆகக்கூடுதலாக மூன்று இலட்சம் ரூபாவை நான்கு சதவீத வட்டியில் பெறமுடியும் இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு கடனாக இந்த வங்கி 250மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இத்திட்டம் வெற்றியளிப்பதை அடுத்து அரசாங்கம் இந்த ஆண்டும் இதற்குத் தேவையான நிதியை வழங்கும் என்று வீடமைப்பு நிதிக்கூட்டுத்தாபன வங்கி நம்பிக்கை தெரிவித்துள்ளது. த-9)

## தளபாடங்கள் கையளிப்பு



(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் துயர்துடைப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் ஜேர்மன் நாட்டின் யுனிற் நகர மக்களின் நிதியுதவியில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர் விடுதிக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் உலகநாதனிடம் முல்லைத்தீவு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகராசா தளபாடங்கள் வழங்குவதைப் படங்களில் காணலாம்.

# பாலசிங்கம் வன்னி செல்வதற்கு அரசு பாதுகாப்பு வழங்கும்

தமிழீழ தேசியத் தலைவருக்கும் நோர்வே நாட்டின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிற்கும் இடையே இன்று நடைபெறவுள்ள சந்திப்பில் கலந்து கொள்வதற்காக வன்னிக்கு வருகை தரவுள்ள விடுதலைப்புலிகளின் மதியுரைஞர் முனைவர் அன்ரன் பாலசிங்கம் கட்டுநாயக்க வானூர்த்தித் தளத்திலிருந்து வன்னி செல்வதற்கு முழுமையான பாதுகாப்பை வழங்குவதற்கு அரசு உறுதியளித்துள்ளது.

இதன்போது மிகப் பாதுகாப்பாக, அவரை வன்னிக்கு கொண்டு செல்வதற்கும் அரச கட்டுப்பாட்டு பிரதேசங்களில் அவரின் பாதுகாப்பிற்கு முழுப் பொறுப்பினையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் இவர் பயணிக்கும் உலங்குவானூர்த்தியில், நோர்வே பிரதிநிதிகளும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் சேர்ந்து பயணிக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

# நோர்வே விலக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பதவியிலிருந்து நோர்வே விலக வேண்டுமென்ற நிலைப்பாட்டில் மாற்றம் இல்லையென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அனுராதபுரத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரிவின்சில்வா இவ்வாறு கூறியுள்ளார்.

புதிய ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பதவியிலிருந்து நோர்வே வெளியேற வேண்டுமென்ற நிலைப்பாட்டை ஜே.வி.பி மாற்றிக் கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருப்பதாகவும், எனினும் தமது நிலைப்பாட்டில் எந்தவிதமாக மாற்றமும் இல்லையெனவும் அவர் கூறினார்.

தேசிய பிரச்சினையில் நோர்வேயின் பங்களிப்புக் குறித்து தமக்கு இணக்கம் இல்லையெனவும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின்சில்வா அங்கு மேலும் குறிப்பிட்டார்.

(து)

# தண்ணீர் பவுசர் வழங்கப்பட்டுள்ளது

(நல்லூர்)

சுனாமியால் பாதிக்கப்பட்டு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள இருபது நலன்புரி முகாம்களில் உள்ள குடும்பங்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையால் இரண்டு பெரியதண்ணீர் பவுசர்கள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடமராட்சி பிரிவின் செயலாளர் தெரிவித்துள்ளார். (க-134)

# விடுதலைப்புலிகளின் அலுவலகம் சேதம்

(கிளிநொச்சி)

தம்பிலுவிலில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறை செயலகமாகச் செயற்பட்டு, தற்போது பூட்டப்பட்டிருக்கும் அலுவலகத்தை நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் அதிரடிப்படையினர் உடைத்து நாசப்படுத்தியுள்ளனர்.

பூட்டப்பட்ட அலுவலகக் கட்டடத்தை உடைத்து, உள்நுழைந்து அலுவலகத்தினுள் உள்ள பொருட்களை நாசப்படுத்தியதுடன், அங்குள்ள மாவீரர்களின் திருவுருவப்படங்களையும் அடித்து நொருக்கி, கிழித்து எறிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-7)

# மீன் சந்தைக்கு புதிய கட்டடம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மீன் சந்தைக்கு பல இலட்சம் ரூபா செலவில் நவீன முறையில் புதிய கட்டடமொன்று அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

10க்கும் மேற்பட்ட மீன் மேடைகள் இதில் அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் சில வாரங்களில் மீன் சந்தை திறக்கப்படும் என பிரதேசசபை பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இறைச்சிக்கடை அருகில் இருப்பதால் பக்கமுள்ள மீன் சந்தையில் தரையில் இருந்து மீன் விற்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-72)

# யுத்தகால அமைச்சரவையை உருவாக்குகிறார் மஹிந்த?

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்த காலத்துக்கான அமைச்சரவையை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாட்களாக கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்களை மஹிந்தவின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து வருகின்றனர்.

மஹிந்தவின் நண்பரான மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிக் அலுவிகார மற்றும் அவரது மகன் ரஞ்சித் ஆகியோர் மஹிந்தவை அண்மையில் சந்தித்தனர். தம்மைச் சந்திக்கும் ஐக்கிய தேசியக் கட்சி நண்பர்களிடம், விடுதலைப்புலிகள் யுத்தத்தைத் தொடங்கினால் யுத்த கால அமைச்சரவையை தாம் அமைக்க உள்ளதாகவும் அப்போது உங்களுக்குப் பணிகள் கொடுக்கப்படும் என்றும் அவர்களிடம் கூறியுள்ளார்.

இந்த யுத்த கால அமைச்சரவையில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன் னாள் அமைச்சர் ஜி.எல் பீரிஸ் முக்கியப் பங்காற்றக்கூடும் என்றும் சில செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# வசதிகளற்ற நிலையில் வைத்தியசாலை...

(ஊர்காவற்றுறை)

தீவகத்தின் மத்தியில் இயங்கும் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையின் அவல நிலை குறித்து நோயாளிகள் பெரிதும் விசனம் அடைந்துள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவில் பதிவு செய்யும் லிகிதர் இல்லாததால் வேறு பிரிவில் இருக்கும் ஒருவரே வந்து பதிந்து சிட்டை கொடுக்கின்றனர்.

இவற்றைவிட வைத்தியசாலையில் முக்கிய ஊசி மருந்துகள், மருந்து வில்லைகள் இல்லாததால் காசு கொடுத்து வெளியில் வாங்க வேண்டிய நிலை வெளி நோயளருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-72)

# கலந்துரையாடல்

(நல்லூர்)

புங்குடுதீவு அருள்மிகு தெய்வக் குழந்தைகள் இல்லத்தின் ஏற்பாட்டில், புங்குடுதீவில் நிலவிவரும் பல தரப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமுகமாக எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புங்குடுதீவு மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்ளவிருக்கிறார். இப்பகுதி மக்களும் பொது நிறவுனங்களும் தங்கள் குறைபாடுகளை இக்கலந்துரையாடலின் போது நேரடியாகவும் எழுத்துமூலமாகவும் சமர்பிக்ககலாமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (க-134)

# 3 மணியுடன் வெறிச்சோடும் ஊர்காவற்றுறைப் பிரதேசம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பகுதியில் பொலிஸ் நிலையம் முன்பாக வீதி மாறிக்கப்பட்டு படையினரால் சோதனை நடத்தப்பட்டு வருகின்றது.

இங்குள்ள பருத்தியடைப்பு, முகாம் வீதி, சென்ஜேமிஸ் வீதி, மேற்கு வீதி ஆகியன சுற்றி வளைக்கப்பட்டு மக்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக மக்கள் வெளியில் செல்லாது வீட்டில் முடங்கியுள்ளனர். வியாபார நிலையங்களும் மாலை 3.00 மணியுடன் இழுத்து மூடப்பட்டு வெறிச்சோடிக் கிடக்கின்றன. இதனால் மக்களின் அன்றாட வாழ்வு பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-72)

# விவசாயப் பொருட்களின் விலைப் பட்டியல்களை காட்சிக்கு வைக்க வேண்டும்

விவசாயத் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் உரவகைகள், கிருமி நாசினி வகைகள் என்பவற்றின் சில்லறை விலைகள், மொத்த விலைகள் என்பவற்றினை நுகர்வோருக்கு தமது வியாபார நிலையங்களில் காட்சிக்கு வைக்க வேண்டும் என பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை சகல வியாபாரிகளையும் கேட்டுள்ளது.

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் 26 ஆவது பிரிவின் படி உரவகைகள், கிருமிநாசினி வகைகள் என்பனவற்றின் உச்ச சில்லறை விலை உற்பத்தி செய்யப்பட்ட திகதி, காலாவதியாகும் திகதி, நிறை என்பன தெளிவாகக் குறிப்பிட்டு பாவவனையாளர்களுக்கு காட்சிப் படுத்தப்பட வேண்டும் என பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை சபையின் தலைவருக்கு அறிவித்துள்ளது.

மேற்படி விபரங்கள் காட்சிக்கு வைக்கப்படுவதை உள்ளூரில் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (க-9)

# கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு விசேட செயல்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

கிராமிய பொருளாத்தாரத்தை துரிதமாக அபிவிருத்தி செய்வதென்ற அரசாங்கத்தின் கொள்கையை செயல் ரீதியாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக இலங்கை வங்கி விசேட திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான முதலீடு இந்தத் திட்டத்தின் கீழ் உடனடியாக வழங்கப்படும்.

விவசாயம், உள்ளூர் கைத்தொழில் கால்நடை வளர்ப்பு போன்ற பல்வேறு துறைகளுக்கு கடன் உதவியாக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படும்.

இந்தக் கடனுக்கு 10 சதவீத வட்டி அறவிடப்படும். மேல் மாகாணத்திற்கு வெளியே உள்ள பிரதேசங்களுக்கென 'கமடநய' என்ற மற்றுமொரு கடன் திட்டத்தையும் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

200 இற்கும் கூடுதலானோருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டங்கள் தொடர்பாக மொத்த செலவீனத்தில் 70 சதவீதத்தை வங்கிக் கடனாகப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு மிக்க குறைந்தவட்டியே அறவிடப்படுகின்றது.

உள்ளூரில் கிடைக்கப் பெறும் மூலப் பொருட்களை பயன்படுத்தி வேலை வாய்ப்புக்களை ஊக்குவிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். (த-9)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை மதுவரி பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருப்பதுடன் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

21 வயதிற்கும் - 35 வயதிற்கும் இடைப்பட்டவராகவும் 5 அடி, 6 அங்குலத்திற்கு குறையாதவராகவும், மார்பளவு 30 அங்குலமாகவும் இருப்பது அவசியமாகும்.

விண்ணப்பதாரி விண்ணப்பத்துடன் பரீட்சை கட்டணமாக 300 ரூபா வங்கிக் கட்டளையுடன் மார்ச் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் மதுவரி ஆணையாளர் மா.அதிபர் இலக்கம் 28, ஸ்டோபில் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சை, நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். (த-9)

# 3,15000 மாணவர்கள் முதலாம் தரத்துக்கு அனுமதி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் திட்டத்தின் கீழ் சகல பாடசாலைகளிலும் 3 இலட்சத்து 15 ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சின் கீழுள்ள 324 தேசிய பாடசாலைகளிலும் மாகாண கல்வியமைச்சின் கீழுள்ள 9 ஆயிரத்து 686 பாடசாலைகளிலும் மாணவர்கள் சோர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுள் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த 92 ஆயிரம் மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் வேலைத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# கிராமத்துப் பாடசாலைகளின் நோக்கும் அதன் இன்றைய போக்கும்

தனக்குவமை இல்லாத நிலையில் எழில் கொஞ்சும் இயற்கையுடைய, அழகுடைய கிராமத்தின் சிறப்பியல்புகளுக்கு முடி வைத்தாற் போல அமைந்திருப்பவை அங்குள்ள ஆலயங்களும், பாடசாலைகளும் என்பது பாரம்பரியமாக நிலவி வரும் மரபு சார்ந்த உண்மை. ஆயினும் இன்றைய நிலையில் ஆலயங்கள் அடியார்கள் நலிவுற்றதாகவும் பாடசாலைகள் மாணவர்கள் நலிவுற்றதாகவும் மாறிவருகின்றன. ஆலயங்கள் அடியார்கள் குறைந்த நிலையிலும் வளப் பொலிவுடன் சிறந்து விளங்கி வருகின்றன. உற்சவ காலங்களிலாவது கிராமத்தின் வாரீசுகள் வருகை தந்து சிறப்பித்துச் செல்கின்றனர். ஆனால் பாடசாலைகளைப் பொறுத்தவரை அப்படியல்ல . மாணவர் எண்ணிக்கை தேய்பிறையாகவே சென்று கொண்டிருக்கிறது. இச்செயல் நிலைக்கான காரணங்களை நோக்குமிடத்து பொருத்தமான காரணங்களைத் தெரிவுசெய்வதில் வேறுபட்ட கருத்துக்களே தொடர்ந்தும் முன் வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிராமங்களிலும் தரம் III, தரம் II, தரம் 1, தரம் 1 AB என்ற வகையில் நகரப் பாடசாலைகட்கு இணையாக பாடசாலைகள் உள்ளன. அக்காலப் பெரியார்களும் சமய நிறுவனங்களும் கிராமப்பிள்ளைகளின் நலன் கருதி அன்ன சத்திரம் ஆயிரம் அமைப்பதை விட ஒரு ஏழைக்கு எழுத்தறிவிப்பதுமேல் என்ற பாரதியின் சிந்தனைக் கொப்ப பாடசாலைகளைக் கட்டுவித்தனர். அதைவிட மத நிறுவனங்கள் பல்வேறு கருத்துச் சிந்தனைகளை மையப்படுத்திகிராமங்களில் பாடசாலைகள் நிறுவியுள்ளன. கிராமத்துக் கட்டமைப்பு பல்வேறு சிக்கல்களையுடையதாகவிருந்த போதும் எதிர்கால வாழ்வியல் அடி நாதமாக அமைகின்ற கல்விக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளமை போற்றுதற்குரியது. இதன் பயனாகப் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை உச்ச நிலையிலிருப்பதாகவும் வினைத்திறன் மிக்க நிர்வாகச் செயற்பாடுகள் வினைத்திறனுடன் கூடிய மாணவர்களை வெளியீடு செய்வதாகவும் தகவல்கள் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன. இதற்குக் கட்டியம் கூறுபவர்களாக பழைய மாணவர்கள் உள்ளனர். வலுவிழந்த நிலையிலும் இவற்றின் பெருமையை பவள விழாக்கள், பத்திரிகை விளம்பரங்கள், பாடசாலைச் சஞ்சிகைகள் புடம் போட்டுள்ளன. இவ்வாறாகப் பலமுடைய பாடசாலைகள் பலவீனமடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டமைக்கும் வலுவிழந்மைக்கும் கல்வியியலாளர்களாலும், சமூகவியலாளர்களாலும் கிராமத்து அபிமானிகளாலும் பல்வேறு கருத்துகள் விதைக்கப்பட்டும் பின் அறுவடை செய்யப்பட்டும் பின் விதைக்கப்பட்டும் வருவது கண்கூடு. அதாவது பிறப்பு வீதம் குறைவடைந்து செல்கின்றமை, புலப்பெயர்வும் இடப்பெயர்வும், நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழல் நிலை, மக்களிடையே உருவாகியுள்ள மனமாற்றம், நகரப்பாடசாலைகளை நோக்கிய நகர்வு, அரசின் கல்விக்கொள்கை, மக்களிடையே பற்றின்மை, சில சமூகவாதிகளின் விட்டுக்கொடாமை ஆகியன முக்கியவிடம் பெறுகின்றன.

*அரசின் கல்வி சீர்திருத்தங்கள்*

இலங்கையைப் பொறுத்தவரையில் மாறிவரும் அரசாங்கங்கள் கல்வியில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதையே மரபாகக் கொண்டிருந்தன. நடை முறையிலுள்ள கல்விக் கொள்கையிலும் உலக வங்கியின் தலையீடு தனித்துவமாயுள்ளது. அதன் சிபார்சுக் கமையவே கல்வி முறைமை நடைமுறைப்படுபடுத்தப்பட்டுள்ளது. இம் மாற்றத்தை ஈடுசெய்யக் கூடிய வகையில் கிராமிய பாடசாலையில் பொருளாதார வளமுடையதாக அமைந்திருக்கவில்லை. கூடுதலாக இந் நிலைமை தரம் III பாடசாலைகளிலேயே கூடுதல் தாக்கத்தையேற்படுத்தியுள்ளது. ஏனைய பாடசாலைகளைப் பொறுத்தவரை இடைக்காலத்திலேயே இந்நிலைமை விஞ்சிநின்றுள்ளது. இத்தார்ப்பரியம் மத்திய தர வர்க்கத்தாரிட்மும் அதற்கு மேற்பட்டவர்களிடமும் மன மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்நிலை கிராமத்துப் பாடசாலைகளில் இயல்பு நிலையின் செல்நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. கல்விச் சீர்திருத்தம் பொருத்தமானது, பொருத்தமற்றது என்பது வேறு எனினும், இதற்கேற்ப வளமிக்கதாக மாற்றுவதற்கு நிர்வாகத்தினர் எதிர் நோக்கிய பிரச்சினைகள் பல. உதாரணமாக விளையாட்டு முற்றம் அமைப்பதேயாயின் பாடசாலைகளை வலுவுடையதாக்க வேண்டும். அதனை அழகுபடுத்தி கவின்நிலையை வரவேற்க வேண்டும். இவையாவற்றுக்கும் அரச நிதியை முழுமையாக எதிர்பார்க்க முடியாது. தேவையான நிதியை பெற்றோர் நலன் விரும்பிகளிடமிருந்தோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தோ பெற்றுக்கொள்ள வேண்டும்.எனினும் அதிபர்கள் கூடிய வலுவுடைய பாடசாலை அமைப்புகளை சீராக்கம் செய்யவேண்டும். இந்நிலையில் பொருத்தமான நிர்வாக உறுப்பினரைத் தெரிந்து கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அரசும் மாணவர் எண்ணிக்கைக் கேற்பவே ஆளணி நியமனத்தையும் மேற்கொள்வதால் தேவையினைப் பூர்த்திசெய்ய முடியாதுள்ளது. ஆசிரியர் பற்றாக்குறை ஒருபோதும் நிவர்த்தி செய்யப்படுவதில்லை. அதைவிட இப் பாடசாலை அதிபர்களின் கருத்தினைச் திணைக்கள அதிகாரிகள் ஏற்றுக்கொள்வதில்லை. தெருவோரப்பாடசாலை அதிபர் வெற்றிடத்துக்கான நேர்முகப்பரீட்சைக்கு இப்பாடசாலை அதிபர்கள் அழைக்கப்பட்டாலும் அவர்கள் முகத்தில் கரிபூசி அனுப்பிவைப்பதும் வழமையாகிவிட்டது.

*சமூக மனமாற்றம்*

ஒவ்வொரு பெற்றோரும் தத்தமது பிள்ளைகளை கல்வியில் மேம்பாடடையச் செய்யும் அவர்களின் உரிமையை மறுதலிக்க முடியாது. ஆயினும் நடைமுறைப் பிரச்சினைகளை இங்கு அலசுவது எதிர்காலக் கல்வித் தார்ப்பரியத்துக்கு ஊன்று கோலாக அமையலாம். பிரதான வீதியோரப் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய பிள்ளைகள் நகரப் பாடசாலைகளை நாடி ஓடிச்செல்வர். தை மாதத்தில் இந்நிகழ்வைக் காணலாம். வீதியோரப் பாடசாலைகளை நோக்கி கிராமத்துப்பிள்ளைகள் செல்வார்கள். இதன்பின் அப்பாவிப் பெற்றோர்களின் பிள்ளைகளும் கிராமத்தில் பற்றுடைய ஒரு சில பெற்றோர்களின் பிள்ளைகளுமே இப்பாடசாலைகளில் இணைந்துகொள்வர். இங்கே மாணவர் எண்ணிக்கை வலுவாகக் குறைந்து காணப்படும். இங்கே மாணவர்களின் எண்ணிக்கையைச் சரிவரக் கூறுவது பொருத்தமானதல்ல. இவற்றின் நிலைமை எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே. இந்நிலை பற்றி இப்பகுதி சமூக அமைப்புகள் பல்வேறு எண்ணக் கருத்துகளை முன்வைத்துள்ளன. தமது பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் சேர்த்துவிட்டு சிலர் தமது ஆட்சி அதிகாரத்தை இப் பாடசாலைகளில் செலுத்தி வருகின்றனர். அதாவது பாடசாலையின் அமுக்கக்குழுவாகச் செயற்பட்டுவருகின்றன. பாடசாலைவிழாக்களில் தமக்கே மாலையணிந்து மதிப்பளிக்கவேண்டுமென நிழல்யுத்தத்தில் ஈடுபடுகின்றனர். இவர்களது வாக்குகளையே மேல் மட்டத்தைச் சார்ந்த பலரும் வேதவாக்காக ஏற்றுக்கொள்கின்றனர். இந்நிலை வலுவிழந்த பொது அமைப்புக்களிடையே அதிருப்தியைத் தருவதாகவுள்ளது. ஆசிரியர் பற்றாக்குறை ஒருபோதும் இங்கு நீங்காது. நியமிக்கப்படும் இளையவர்கள் விரைந்திட பழையவர்கள் மட்டும் ஓய்வுகாலத்தை நோக்கித் தவம் இருப்பார்கள். பாடசாலை விழாக்களில் விருந்தினராகக் கலந்துகொள்ள அதிகாரிகள் விரும்புவதில்லை. எனவே பிள்ளை வெளியுலகைஅறிந்திட வெளிப்பாடசாலைகளைத் தெரிவுசெய்வதன் ஊடாக உலகமயமாக்கலுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம். என்ற நோக்கில் பெற்றோர்கள் செயற்படுவதுண்டு. எனவே இந் நிலைமையை மாற்றியமைக்க கல்வியியலாளர்களும் திணைக்களம் சார்ந்தவர்களும் திட சங்கற்பம் பூண்டு கிராமத்துப் பாடசாலைகளை வள முடையதாக்க முன்வரவேண்டும்.

*அதிகாரிகள் மனமாற்றம்*

கிராமப்புறப் பாடசாலைகளைப் பொறுத்தவரை இங்கு சேவையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் இடமாற்றமின்றி பதவியுயர்வின்றி நீண்ட காலமாகக் கடமையாற்ற வேண்டிய நிலையே தொடர்கின்றது. அதிபர்கள் வேறுபாடசாலைகட்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டாலும் நகரப்பாடசாலை, வசதியான பாடசாலை ஆகியவற்றின் அதிபர்களுடன் ஒப்பீட்டு செயற்திறன்களுடன் கூடிய சம்பந்தமில்லா வினாக்களைத் தொடுத்து அவர்களை மட்டம் தட்டி வருவதால் இடமாற்றம் வழங்கப் படுவதில்லை. இது போன்றே ஆசியர்களின் நிலையுமாகும். இதனால் இவர்களைக் கிராமிய சமூகமும் தரக்குறைவாகவே மதிப்பிட்டு வருகின்றது. இவர்களின் நிலைபற்றி யாரும் அறியார். கிராமத்தில் சின்னவீடு இருப்பதாக சிலர் எள்ளி நகையாடுவர். எனவே இவ்விடயத்தில் அதிகாரிகளின் தவறுகள் கிராமத்துப் பாடசாலைகளில் கல்விச் செயல் நிலையைப் பாதிப்படையச் செய்கின்றன. இதை நீக்க அமைச்சு மட்ட, திணைக்கள மட்ட அதிகாரிகள் கிராமத்துப் பாடசாலைகளில்வளர்ச்சியில் அக்கறை கொண்டு அதிபர் ஆசிரியர்களின் உளத்தாக்கங்கள், கௌரவம், தார்ப்பரியம் என்பவற்றை மதித்து எல்லோரும் எல்லாப் பாடசாலைகளிலும் கடமையாற்றும் வகையில் செயற்படுவது வரவேற்கத்தக்கது. இவ்விடயத்தில் ஓய்வு பெற்ற அதிகாரிகளின் சிபார்சுகள், தனி மனித சிபார்சுகள் என்பவற்றை கருத்தில் கொள்ளாதுநீதியுடனும்நியாயத்துடனும் நேர்மனப் பாங்குடனும் அதிகாரிகள் செயற்படுவார்களேயானால், அது கிராமத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் செய்யும் தொண்டாக அமையும். கிராமப் பாடசாலைகளின் வளர்ச்சிக்குப் பொருத்தமான அனைத்துத் தரப்பினரும் கைகோர்த்துச் செயற்படுவோம்.

**மு.விக்னேஸ்வரன்**

## சகல பிள்ளைகளுக்கும் கல்வி கற்க வாய்ப்பளிக்கப்படும்

நாட்டிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் கல்வியளிப்பதற்காக இரண்டு விசேட திட்டங்களை கல்வியமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தில் முதற்கட்டமாக பிள்ளைகளின் தேவைகள் குறித்து விசேடகவனம்செலுத்துவதற்கென தேசிய மட்டத்திலான நிலையமொன்றை நிறுவுவதாகும்.

இந்தப் பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதற்கு ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சியளிக்கப்படவுள்ளது. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கென விசேட பாடவிதான மொன்றும் தயாரிக்கப்படும்.

ஏற்கனவே பாடசாலைகளுக்கு செல்லாதிருக்கும் பிள்ளைகள் குறித்தும் கல்வியமைச்சு விசேட கவனம் செலுத்தவுள்ளது. இத்திட்டத்தின்படி பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லாதிருக்கும் காரணம் குறித்தும் அமைச்சு கவனம் செலுத்தும். இச்சிறுவர்களுக்கு விசேட பாடசாலைகள் நிறுவப்படவுள்ளன. (க-9)

## படகுத் தொகுதிகளை வழங்க நடவடிக்கை

(நல்லூர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு மக்களில் தெரிவுசெய்யப்பட்ட 10 பேருக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் படகுத்தொகுதிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க வடமராட்சி கிழக்குப் பிரிவின் செயலாளர் எஸ்.ஸ்ரனிலோஸ் தெரிவித்துள்ளார். (க-134)

## ஐ.தே.க.வின் மூத்த தலைவர்கள் மஹிந்தவின் அரசில் இணைவு?

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் மூத்த தலைவர்கள் ஜி.எல். பீரிஸ், மஹிந்த சமரசிங்க உள்ளிட்ட 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் இணையக்கூடும் என்று கொழும்புச்செய்திகள் கூறுகின்றன.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான கருத்து முரண்பாட்டையடுத்து இந்த நிலைப்பாட்டை அவர்கள் மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஐ.தே.க.வின் முக்கிய தலைவர்களாகக்கருதப்படுகிற ஜி.எல். பீரிஸ்,மஹிந்தசமரசிங்க, கெஹெலிய ரம்புக் வெல்ல, ஜி.வி.புன்சினிலம, சரத்ரணவக்க ஆகியோர் இந்தப்பட்டியலில் உள்ளதாகக்கூறப்படுகிறது. கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து ரணில் விலகாவிட்டால் தாங்கள் கட்சி மாறுவோம் என்று இந்த அதிருப்திக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே கட்சி தாவும் ஐக்கிய தேசியக்கட்சியினரை வரவேற்பதாகவும், அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கும் வகையில் பிரதி அமைச்சுக்களை தம் வசம் வைத்திருக்கும் அமைச்சர்கள் பதவிகளை விட்டுக்கொடுக்க வேண்டும் என்றும் மஹிந்த ராஜபக்ஷ பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார். இதையடுத்து சூரியராச்சி உள்ளிட்ட சில அமைச்சர்கள் பிரதி அமைச்சுப் பொறுப்புகளிலிருந்து விலகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறை அபிவிருத்தி சம்பந்தமான வருடாந்த நிகழ்ச்சித்திட்ட முக்கிய முடிவுகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 26ஆம் திகதி யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் அன்று காலை 10 மணிக்கு அவரது பணிமனையில் இடம் பெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (கு)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

27 மீள்பார்வை



மனைவி கமலாவுடன்...

என்ன ஆனாலும் சரி... கணேசனை வைத்துத்தான் இந்தப் படத்தை எடுக்க வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றார். அவரது மன உறுதியும் என் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையும் தான் என்னை நடிகனாக்கியது. அந்த நம்பிக்கை தான் என்னை அந்தத் தொழிலிலேயே தங்க வைத்தது. 1950-ல் பராசக்தியில் நடிக்க வந்தேன். 1952இல் அந்தப் படம் ரிலீஸ் ஆனது.

டி.எஸ்.என்: இந்த இரண்டு வருட காலத்தில் பராசக்தி படத்தில் மட்டும் நடித்துக் கொண்டிருந்தீர்களா? அல்லது வேறு படங்கள் அல்லது நாடகத்தில் நடித்தீர்களா?

சிவாஜி: இவ்வளவு டென்ஷனுக்கு நடுவில் பராசக்தி படத்தில் நடிக்கும் போது நான் இரண்டு மூன்று படங்களில் நடிக்க ஆரம்பித்துவிட்டேன். அதுவும் பி.ஏ.பி அவர்கள் சொல்லித்தான் என்னை புக் செய்தார்கள் .அஞ்சலிதேவி அவர்கள் ஒரு தெலுங்குப் படம் எடுத்தார்கள் . அதற்கு பெயர் பரதேசி. அதில் நாகேஸ்வரராவ்தான் பெரிய ரோல் நடித்தார். நான் இரண்டாவது ரோல் தான் நடித்தேன்.



'பரதேசி' படத்தில் நாகேஸ்வரராவுடன்

அதற்கு அடுத்து பெம்புடு கொடுக்கு என்ற தெலுங்குப் படம் . அது தமிழில் பெற்ற மனம் என்ற பெயரில் வந்தது. அது இரண்டுமே கூட என் முதலாளி பி.ஏ.பியின் தயவினால் தான் நடிக்க ஆரம்பித்தேன். எல்.வி.பிரசாத் அந்தப் படத்தை டைரக்ட் செய்தார். அப்பொழுது மாற்று மொழியில் அந்தந்த மொழி பேசுகின்ற ஆக்டரைத்தான் போடுவார்கள்.பரதேசி படத்தின் தமிழ் பெயர் பூங்கோதை. எல். வி.பிரசாத்துக்கு என் நடிப்புத் திறமையில் நம்பிக்கை இருந்தது. ஆனால் அப்பொழுது பராசக்தி படம் முடியவில்லை.

பராசக்தி படம் நடந்து கொண்டு இருக்கும்பொழுது தான் இரத்தக் கண்ணீர் படத்தையும் ஆரம்பித்துவிட்டார். பி.ஏ.பெருமாள் ஆகையால்தான் பராசக்தி படம் வெளியாக ஆறு மாதம் காலதாமதமாகி விட்டது. இந்த இடைவெளியில் பரதேசி தெலுங்கு படத்திலும் அதன் தமிழாக்கத்தில் வந்த பூங்கோதை படத்திலும் நடிக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

டி.எஸ்.என்.பராசக்தியில் உங்களுக்குச் சம்பளம் எவ்வளவு?



பி.ஏ. பெருமாள் அவர்களுடன்...

சிவாஜி: அப்பொழுது எனக்குக் கிடைத்தது பெரிய சம்பளம். மாதம் இருநூற்றி ஐம்பது (250) ரூபாய், பராசக்தியில் 250 ரூபாய் வாங்கினேன். ஆனால் அதே சமயம் மற்றப்படங்களில் இருப்த்தைந்தாயிரம் ரூபாய் வாங்கினேன். இருநூற்றி ஐம்பது ரூபாய் வாங்கியது நன்றிக் கடன் .இருபத்தைந்தாயிரம் ரூபாய் வாங்கியது தொழில் சம்பளம்.

பி.ஏ.பி. அவர்கள் எனக்கு வாழ்வு கொடுத்த தெய்வம் என்பதால் அவருக்காக நான் நடித்துக் கொடுத்தேன். பணம் என்ன? இலவசமாகக்கூட நடித்துக் கொடுத்திருப்பேன்.இப்பொழுதும் அதுபோல் நடித்துக் கொண்டுதான் இருக்கிறேன். பி.ஏ.பெருமாள் அவர்கள் தற்பொழுது இல்லை. அந்த நன்றியை மறக்காமல் வருஷா வருஷம் அவர் வீட்டில்தான் என்னுடைய பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிறேன் . அன்றைய தினம் அவர் வீட்டுக்குச் சென்று பி.ஏ.பெருமாள் அவர்கள் படத்திற்கு மாலை போட்டு அவர் பாதத்தில் வேட்டி சட்டை வைத்து விட்டு அந்த அம்மாவுக்கு புடவை கொடுத்து விட்டு அவர்களுடன் தான் பொங்கல் சாப்பிடுகிறேன். என்றைக்கும் நான் நன்றி மறக்கமாட்டேன்.



தாயாருடன் .....

எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார். அதை நான் எப்பொழுதுமே மறக்கமாட்டேன் . அதை இன்றும் கடைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன்.

டி.எஸ்.என். பராசக்தி படத்தை வெளியிட்டு மக்களிடையே பாராட்டைப் பெறுவதற்கு ஏதாவது பிரச்சினைகள் இருந்ததா ?

சிவாஜி: நாங்கள் இந்தப் படத்தில் மட்டுமன்றி நிறைய நாடகத்திலும் புரட்சிகரமான கருத்துகளைச் சொல்லி இருக்கிறோம். சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் நாடகத்தில் சொன்னதை விடவா பெரிதாக சொல்லி விடப்போகிறோம்?

திரைப்படங்களை எடுத்துக் கொண்டால் விதவை திருமணம் செய்ய வேண்டும். சீர்கேடான சமூகத்தைச் சாட வேண்டும். நாட்டைப் பற்றிப் பேச வேண்டும் என்ற கருத்துக்களெல்லாம் பராசக்தியில்தான் பேசப்பட்டது.

அப்போதெல்லாம் சென்சார் மிகவும் கடினம். இப்போதெல்லாம் சென்சார் மிகச் சுலபமாக இருக்கிறது. அப்போது சென்சாரில் பராசக்தி படம் வெளிவரக்கூடாது என்ற எண்ணம் நிலவியது. அது மட்டுமில்லாமல் இந்தப் படத்தை சென்சார் செய்வதற்கு நிறையப் பேரை நியமித்தார்கள்.

அப்பொழுது ஸ்டாலின் ஸ்ரீனிவாசன் என்பவர் சென்சார் ஆபீஸராக இருந்தார். அவர் மிகவும் கண்டிப்பான ஆள். அவரை பாம்பே தமிழன் என்றும் கூறுவார்கள். அவர் கண்ணில் எண்ணெயை விட்டுக் கொண்டு படத்தைப் பார்த்தார். இப்படியெல்லாம் இருந்தும் எப்படியோ கஷ்டப்பட்டு இந்தப் படத்தை ஏ.வி.எம் அவர்கள் வெளிக்கொண்டு வந்தார்கள்.

அதற்குப் பிறகு இந்தப் படத்திற்குச் சென்சார் பெற்று தடை விதிக்க போகிறார்கள் என்று கூட செய்தி வந்தது. அந்தச் செய்தியைக் கேட்டு மேலும் விளம்பரம் அதிகமாகி பராசக்தி படம் ஓகோ வென ஓட ஆரம்பித்தது.

(தொடரும்)

# மாவட்ட நீதிமன்றம் -யாழ்ப்பாணம்
# பகிரங்க பிஸ்கால் ஏலவிற்பனை

01. செல்லப்பா பொன்னம்பலமும்
02. பெண் உமாதேவியும்
இருவரும் புதுறோட்,காரைநகர்.

-வழக்காளிகள்

எதிர்

வழ.இல:ஈ-டு/42

01.இராசையா கைம்பெண் யோகவதி
02. இராசையா ஸ்ரீராம்
(இறந்துவிட்டார்) 03. இராசையா மகள் இராஜகுமாரி
மூவரும் மேதர்ஸ் லேன், மானிப்பாய்.

-எதிராளிகள்

2005.11.29ஆம் திகதி இந் நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய துரைச்சாமி சிறீமோகன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட விற்பனவு அதிகாரத்திற்கமைவாகவும் இவ் விற்பனையை நடாத்த மன்று நியமித்து உள்ளதால் இதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறிப்பிட்ட ஆதனத்தில் நின்று 2006 ஆம் ஆண்டு மாசி மாதம் 27ஆம்திகதி திங்கட்கிழமை (2006.02.27) காலை 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

## தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் வழக்காளிகளுக்கு ரூபா இரண்டு இலட்சம் (ரூபா.200,000/-) உம் மேலும் ரூபா முப்பத்துமூன்று ஆயிரம் (ரூபா 33,000/-)க்கு வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 48% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 2000ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 16ஆம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 2003ஆம் ஆண்டு சித்திரை மாதம் 25ஆம் திகதி வரையுமாக வட்டியும் அதன் பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான நூற்றுக்கு 12 % வட்டியும் வழக்கு செலவு ரூபா ஐயாயிரத்து அறுநூற்றுஎண்பத்தியெட்டு (ரூபா 5688) உம் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

## ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்ரிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானை மேற்கு இறை'கும்பந்தாவத்தை' 1966 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 25ஆம் திகதி நில அளவையாளர் எஸ்.முத்துக்குமாரசாமியால் 2966ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் 3ஆம் துண்டாக விஸ்தரிக்கப்பட்ட காணி பரப்பு நில. இலா. நாலும் (பர.நில.இலா.4) கிணறும். எல்லை கிழக்கு: அரசரத்தினம் பெண் தனலட்சுமிக்குரிய ஆதனம்,வடக்கு: கனகசபை கந்தையாவுக்குரிய ஆதனம்,மேற்கு: இக் காணிக்கும் தெற்கெல்லைக் காணிக்கும் பாவிப்புக்குரிய எட்டு முழ அகலம் கொண்ட ஒழுங்கை,தெற்கு: இராசையா கைம்பெண் யோக வதிக்குரிய ஆதனமும் கந்தையா தர்லிங்கத்திற்குரிய ஆதனமும் இதடங்கலும் குறித்த ஒழுங்கைப் பாவிப்பு உரித்தும்.

வாங்கற்காரன் கொள்விலையில் நாலிலொரு பங்கை உடன் அவ்விடத்திலேயே செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

1. அரச இறை (பவுண்டேஜ்) -1 %
2. பிஸ்கால் செலவு சிவில் நடமுறைக் கோவையின் படி
3. விளம்பரச் செலவுகளும்,பிரசித்த செலவுகளும்
4. விற்பனை சம்பந்தமான போக்குவரத்து செலவுகள்
5. விற்பனை கமிசன் -2 1/2 %
6. விற்பனை ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி) 2006 ஆம் ஆண்டு தை மாதம் 18ஆம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி-

து.சிறீமோகன்
பதிவாளர்/ பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(C/138)

# 2 பொதுமக்கள் படுகொலை
# செட்டிக்குளத்தில் சம்பவம்

மன்னார் செட்டிக்குளத்தில் பொலிஸார் நேற்று முன்தினம் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கி சூட்டில் இரு பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

செட்டிக்குளத்தில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் பொலிஸார் ஒருவர் படுகாயமடைந்தார். இதையடுத்து ஏனைய பொலிஸார் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த இரு பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.கைக்குண்டுத் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் செட்டிக்குளம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அனுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

மன்னார் -மதவாச்சி பிரதான வீதியில் உள்ள செட்டிக்குளம் சந்தியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

(க-39,4)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டிய


**சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 நவம்பர் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

## சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

8 *(சென்றவாரத் தொடர்ச்சி...)*

3. செயற்குழு உறுப்பினர்கள், அரசாங்கங்களால் தேர்வு செய்யப்பட்ட ஒருகுழுவிலிருந்து, இரகசியவாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். அரசதரப்பு ஒவ்வொன்றும் தனது சொந்த நாட்டவர்களில் ஒருவரை நியமிக்கலாம்.

4. செயற்குழுவுக்கான முதலாவது தேர்தல், இச் சமவாயம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து ஆறு மாதத்துக்குப் பிந்தாமலும் அதன் பின்னர் இரண்டு வருடத்துக்கு ஒரு முறையும் நடத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு தேர்தலுக்கும் குறைந்த பட்சம் நான்கு மாதத்துக்கு முன்னர், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அரசதரப்பினருக்குக் கடிதமொன்றினை அனுப்பி



இரண்டு மாதத்துள் தமது தேர்வு நியமனங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்க வேண்டும். இதன் பின்னர், செயலாளர் நாயகம், நியமனம் பெற்றவர்களின் பட்டியல் ஒன்றை அகரவரிசைப்படி தயாரித்து அவர்களை நியமித்த அரச தரப்பினையும் குறிப்பிட்டு, தற்போதைய சமவாயத்தின் அரசதரப்பினருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. தேர்தல்கள் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் செயலாளர் நாயகம் ஏற்பாடு செய்யும் அரசதரப்புகளின் கூட்டத்தில் நடத்தப்படல் வேண்டும். இக்கூட்டங்களில் அரசதரப்புகளின் மூன்றில் இரண்டு பங்கினர் கூட்ட நடப்பெண் உறுப்பினர்களாகச் சமூகமளித்திருத்தல் வேண்டும். செயற்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் மிகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றவர்களாகவும், வாக்களிப்போர் நேரடியாகப் பங்குகொண்ட பிரதிநிதிகளின் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

6. செயற்குழு உறுப்பினர்கள் நான்கு வருடகாலத்துக்குத் தெரிவு செய்யப்படுவர். மீளவும் நியமனம் பெற்றால் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதி பெறுவர். முதலாவது தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து உறுப்பினர்களின் பதவிக்காலம் ஈராண்டில் முடிவடையும். முதலாவது தேர்தல் முடிந்த உடனேயே கூட்டத்தின் தலைவர் இந்த ஐந்து உறுப்பினர்களின் பெயர்களை திருவுளச் சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்வர்.

7. செயற்குழு உறுப்பினர் ஒருவர் இறந்தால் அல்லது பதவி துறந்தால் அல்லது வேறு எக்காரணத்தை முன்னிட்டும் குழுவின் பணிகளை நிறைவேற்ற முடியாதென அறிவித்தால், தன் நாட்டைச் சேர்ந்த மற்றொரு நிபுணரை எஞ்சியுள்ள காலத்துக்குப் பணியாற்றும் படி அரச தரப்பு நியமிக்கலாம். ஆனால், அதற்கு செயற்குழுவின் அங்கீகாரம் தேவை.

8. செயற்குழு தனது நடைமுறை விதிகளைத் தானே அமைத்துக் கொள்ளும்.

9. செயற்குழு ஈராண்டு காலத் துக்குத் தனது உத்தியோகத் தர்களைத் தேர்ந்தெடுக்கும்.

10. செயற்குழுவின் கூட்டங்கள் வழக்கமாக ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் அல் லது செயற்குழு வசதியான தெனக் கருதும் வேறோர் இடத்தில் நடைபெறும். செயற் குழு வழக்கமாக ஆண்டுக்கு ஒருமுறை கூட வேண்டும். கூட்டத்தின் காலவரையறை, அவசியமாயின், பொதுச் சபையின் அங்கீகாரம் இருக்கும் பட்சத்தில், இச் சமவாயத்தின் அரச தரப் பினர் கூட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட லாம்.

11. தற்போதைய சமவாயத்தின் பணிகள் சிறப்பான முறையில் நிறைவேற்றப்படுவதற்கு அவசியமான ஊழியர்களையும் வசதிகளையும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொடுத்துதவ வேண்டும்.

12. தற்போதைய சமவாயத்துக்கு அமைய நியமனம் பெற்ற செயற்குழு உறுப்பினர்கள் பொதுச் சபையின் அங்கீகாரத்துடன், அச்சபை தீர்மானித்த விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டவாறான வரும்படிகளை ஐக்கிய நாடுகளின் நிதிமூலங்களிலிருந்து பெறுவர்.

**உறுப்புரை 44**

1. இத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகளைச் செயற்படுத்துவதற்குத் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் உரிமைகளை ஆண்டனுபவிப்பதில் ஏற்பட்ட முன்னேற்றம் ஆகியன தொடர்பான அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் மூலமாக செயற்குழுவுக்குச் சமர்ப்பிக்க அரசதரப்பினர் பொறுப்பேற்க வேண்டும். இது,

(அ) சம்பந்தப்பட்ட அரச தரப்பு சமவாயத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்த ஈராண்டுக்குள்ளும்,

(ஆ) அதன் பின்னர் ஐந்தாண்டுக் கொரு முறையும் நடைபெற வேண்டும்.

2. இந்தச் சமவாயத்தின் கடப்பாடுகள் நிறைவேற்றப்படும் அளவைப் பாதிக்கும் காரணிகளும் சிரமங்களும் இருந்தால், இந்த உறுப்புரையின்படி தயாரிக்கப்படும் அறிக்கைகள் அவற்றைச் சுட்டிக் காட்டுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட நாட்டில் சமவாயம் செயற்படுத்தப்படும் விதம் பற்றிய விளக்கத்தை செயற்குழுவுக்கு வழங்குவதற்குப் போதுமான தகவல்களையும் அவ்வறிக்கைகள் கொண்டிருத்தல் வேண்டும்.

3. விரிவான ஆரம்ப அறிக்கையினைச் செயற்குழுவுக்குச் சமர்ப்பித்த ஓர் அரசதரப்பு, இந்த உறுப்புரிமையின் I (ஆ) பந்தியின் பிரகாரம் பின்னர் சமர்ப்பிக்கும் அறிக்கைகளில் ஏற்கனவே தெரிவித்த அடிப்படைத் தகவல்களை மீண்டும் கொடுக்கவேண்டியதில்லை.

4. செயற்குழு சமவாயம் அமுலாக்கப்படுதல் தொடர்பான மேலும் தகவல்களை வழங்குமாறு அரசதரப்பினரைக் கேட்கலாம்.

5. செயற்குழு, ஐ.நா.வின் பொருளாதார, சமூக சபையின் மூலம் பொதுச் சபைக்குத் தனது நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகளை ஈராண்டுக்கொரு முறை சமர்ப்பித்தல் வேண்டும்.

6. அரசதரப்பினர் தமது அறிக்கைகள் தமது நாட்டு மக்களுக்குப் பரவலாகக் கிடைக்க வேண்டிய வழிவகைகளைச் செய்தல் வேண்டும்.

**உறுப்புரை 45**

சமவாயம் சிறப்பாகச் செயற்படுவதைப் பேணவும் சமவாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும்,

(அ) சிறப்பு முகவர் நிலையங்கள், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்)மற்றும்நாடுகளின் ஏனைய அமைப்புகள் என்பன, தத்தமது அதிகார எல்லைக்குள் அமைகின்ற உறுப்புரைகள் தொடர்பாக செயற்பாடுகள் ஆராயப்படும் போது தமது பிரதிநிதிகளைப் பங்கு கொள்ளச் செய்யும் உரித்துடையனவாய் இருத்தல் வேண்டும். செயற்குழுவானது சமவாயத்தின் செயற்பாட்டில் சிறப்பு முகவர் நிலையங்கள், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், ஏனைய தகுதி வாய்ந்த அமைப்புகள் ஆகியவற்றை, அந்தந்த அமைப்பின் எல்லைக்குட்பட்ட விடயங்கள் தொடர்பாக நிபுணத்துவ ஆலோசனை வழங்குமாறு அழைக்கலாம். சமவாயத்தின் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படியும் செயற்குழு மேற்படி அமைப்புகளை அழைக்கலாம்.

(ஆ) அரசதரப்பினர் சமர்ப்பிக்கும் அறிக்கைகளில் தொழில்நுட்ப ஆலோசனை அல்லது உதவி தொடர்பான விண்ணப்பம் காணப்பட்டால் அல்லது தேவை சுட்டிக் காட்டப்பட்டிருந்தால், செயற்குழு, அவ்வாறான தேவை அல்லது விண்ணப்பத்தை அவை பற்றித் தனக்கு



ஏதும் கருத்து அல்லது யோசனை இருப்பின், அதனோடு பொருத்தமானதெனக் கருதும் சிறப்பு முகவர் நிலையங்கள், ஐக்கிய நாடுகள் நிதியம் மற்றும் தகுதி வாய்ந்த அமைப்புகள் ஆகியவற்றுக்கு அனுப்புதல் வேண்டும்.

(இ) சிறுவர் உரிமைகள் தொடர்பான குறிப்பிட்ட பிரச்சினைகளையிட்டுத், தன் சார்பாக ஆய்வுகளை மேற்கொள்ளும்படி செயலாளர் நாயகத்தை வேண்டுமாறு செயற்குழு பொதுச் சபைக்குச் சிபார்சு செய்யலாம்.

(ஈ) செயற்குழு தற்போதைய சமவாயத்தின் 44, 45ஆம் உறுப்புரைகளுக்கு அமையப் பெற்றுக் கொண்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டு யோசனைகள், பொதுவான விதந்துரைகள் ஆகியவற்றைத் தெரிவிக்கலாம். இவ்வாறான யோசனைகளும், விதந்துரைகளும் சம்பந்தப்பட்ட அரசதரப்பினருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அத்துடன், அரசதரப்பினர் குறிப்புரைகள் ஏதும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவற்றையும் சேர்த்துப் பொதுச் சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

### பாகம் 3

**உறுப்புரை 46**

இந்தச் சமவாயம் எல்லா நாடுகளும் ஒப்பமிடக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**உறுப்புரை 47**

இச் சமவாயம் ஒப்புதலைப் பெற இருக்கிறது. ஒப்புதல் தொடர்பான அதிகாரப் பத்திரங்கள் (instruments) ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**உறுப்புரை 48**

இச் சமவாயம், எந்த நாடும் சேர்ந்து கொள்ள இடமளிப்பதாய் இருத்தல் வேண்டும். அதற்குரிய சாசனங்கள் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(தொடரும்)

**அன்பார்ந்த மாணவர்களே!**
**உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகு மதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.**


சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## நல்ல வார்த்தை

சின்னான் வறுமையில் வாடினான். அவனுக்கு பிழைக்க வழிதெரியாமல் திண்டாடினான்.

மலையில் ஒரு மகரிஷி இருப்பதாகவும், அவரைப் பார்த்து ஆசி பெற்று வந்தால் குடும்பம் விருத்தியாகும் என்றும் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறான். அப்படியே அவரைப் பார்த்து வருவோம் என்று



கிளம்பினான். கடும் பிரயாசைக்குப் பின் ரிஷியைப் பார்த்து விட்டான்.

அவருக்கு கொண்டுபோய் இருந்த தேங்காய், பழங்களைப் படைத்தான்.

ரிஷியிடம் தன் கஷ்டங்களை எல்லாம் எடுத்துச் சொன்னான்.

அவர் ஒரு தேங்காயை எடுத்து ஆசீர்வதித்துக் கொடுத்து "இதைக் கொண்டு போய் உன் மனைவி கையில் கொடுத்து உடை. மற்றவை அவளுடைய நாக்கில் இருக்கிறது என்று கூறி அனுப்பி வைத்தார்.

கணவனை எதிர்பார்த்து மனைவி காத்திருந்தாள். சின்னான் வீடு வந்து சேர்ந்தான். மகரிஷி கூறிவிட்ட விவரங்களையெல்லாம் கூறினான்.

எல்லோரும் வாழவேண்டும் என்ற நல்ல எண்ணமுடைய அவன் மனைவி, "மகரிஷி எண்ணம்போல் என் வீடு பொன்னும் பொருளும் நிறைந்து செழிக்கட்டும்" என்று கூறி தேங்காயை நடு வீட்டில் உடைத்தாள். என்ன ஆச்சரியம்! தேங்காய்க்குள் இருந்து தங்கக் காசுகளும் நவரத்தினங்களும் வெளியே வந்தன.

அன்றிலிருந்து சின்னான் வீடு செழிக்கலாயிற்று.

இதை எதிர் வீட்டு மாடன் பார்த்துக் கொண்டிருந்தான். சின்னானிடம் பொன்னும் பொருளும் வந்த விவரத்தை அறிய விரும்பினான்.

ஒருநாள் சின்னானிடம் விவரம் கேட்டான்.

"கைலாய மலையிலுள்ள மகரிஷியிடம் போய் ஆசி பெற்று வந்தால் பொன்னும் பொருளும் வந்து குவியும்" என்று சின்னான் சொல்லி விட்டான்.

மாடனும் மகரிஷியைப் பார்க்க கைலாய மலைக்குப் போனான். மிகவும் சிரமப்பட்டு ஒருவழியாய் மகரிஷியைப் பார்த்துவிட்டான். தன் கஷ்டத்தையெல்லாம் சொன்னான். அவரும் சின்னானுக்கு கொடுத்தது போல ஒரு தேங்காயை ஆசீர்வதித்து கொடுத்து,

"மற்றவை உன் மனைவியின் நாவில் இருக்கிறது" என்று கூறி அனுப்பினார்.

மாடன் மனைவி மாடத்தி கணவன் பொன்னும் பொருளும் ரிஷியிடமிருந்து கொண்டு வருவார் என்று ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்தாள்.

கணவன் வெறுங்கையோடு வந்ததில் அவளுக்கு எரிச்சல்.

"விளக்குமாறு! அவர் தேங்காய் கொடுத்து விட்டாருன்னு நீங்களும் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறீங்க...." என்று தேங்காயை வாங்கி விட்டெறிந்தாள். தேங்காய் சில் சில்லாய் சிதறியது. ஆனால் ஒவ்வொரு சில்லிலிருந்தும் விளக்குமாறாய் கொட்டியது.

அதைக் கண்டவுடன் தான் எப்போதும் நல்லவார்த்தை சொல்லப் பழக வேண்டும் என்று மாடன் மனைவி உணர்ந்து கொண்டாள்.

## சேர் வால்ட்டர் ராலி



(Sir Walter Raleigh, 1562–1618) உலகப் புகழ்பெற்ற ஆங்கிலேய வரலாற்றாசிரியர் சேர் வால்ட்டர் ராலி. பல கவிதைகளும் எழுதியிருக்கிறார். இவர் சிறந்த போர்வீரர்; நாடாய்வாளர். வட அமெரிக்காவில் ஆங்கிலேயர்கள் சென்று குடியேறுவதற்கு இவருடைய முயற்சிகளே வழி வகுத்தன.

இங்கிலாந்தில் டெவன்ஷயரில் (Devonshire) பிறந்தார் ராலி. ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றார். ஆனால் பட்டம் பெறாமலே வெளியேறினார். கடல் பயணத்தில் ஆர்வமுடையவராக இருந்தார். வட அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைக்க 1578இல் சென்ற ஒரு குழுவுடன் இவரும் சென்றார். அயர்லாந்தில் 1580இல் கிளர்ச்சி தோன்றியபோது இவர் ஒரு படைக்குத் தலைவராகச் சென்று அக்கிளர்ச்சியை அடக்கினார். அதன்மூலம் இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபெத்தின் நன்மதிப்பைப் பெற்றார். அரசவையில் இவர் பல பொறுப்புகளை வகித்து மிகுந்த செல்வாக்குடையவரானார்.

ஸ்பானியக் கடற்படையினர் 1588இல் இங்கிலாந்தைத் தாக்கினர். இவர் அப்படையினரைத் தோற்கடிக்க உதவினார். எலிசபெத் அரசி 1603இல் இறந்ததும் முதலாம் ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்தார். அவர் ராலி மீது ஐயங்கொண்டு அரசத் துரோகக் குற்றஞ்சாட்டி சிறையில் அடைத்தார். சிறையிலிருந்த 13 ஆண்டுகளில் 'உலக வரலாறு' என்னும் புகழ்பெற்ற வரலாற்று நூலை இவர் எழுதினார். பல கவிதைகள் இயற்றினார்.

சிறையிலிருந்து 1616இல் ராலி விடுதலையானார். அமெரிக்காவில் ஒரு தங்கச் சுரங்கத்தைக் கண்டுபிடிக்க, அரசர் அனுமதி பெற்று ஒரு கடற்படையுடன் சென்றார். இப்பயணத்தின்போது அரசரின் ஆணையை மீறி ஸ்பானியருடன் போரிட்டார். இதை அறிந்த அரசர் இவரைத் திரும்பி வரும்படி உத்தரவிட்டு ஆணையை மீறியதற்காக மரண தண்டனை விதித்தார்.

## விடுகதைகள்

1.விருப்பப்பட்ட எண்ணத்தில் வீதியில் போட்ட வண்ணம் அது என்ன?

2.ஒற்றைக்காலன் ஓயும்வரை ஆடுகிறான் அவன் யார்?

3.மண்ணுக்குள் இருப்பவன் மங்கள காரியத்துக்கு வேண்டியவன் அவன் யார்?

4.சட்டை கழற்றியவன் சரசரவென்று போகிறான் அவன் யார்?

5.பந்தலில் தொங்கிய பாம்புக்கு கல்லைக்கட்டி வைத்திருக்கிறார்கள் அது என்ன?

6.எண்ணெயில் கொதித்தவன் பசிக்கு உணவானான் அவன் யார்?

7.விளக்கை சுமந்தபடி விழிய விழிய பறப்பான் அவன் யார்?

8.வானில் பறப்பாள் வாலுள்ள தேவதை அது என்ன?

9.இந்திய வரைபடம் போல் ஒரு இனிப்புக்கூடு அது என்ன?

10.ஆயிரமாயிரம் பேர் அணிவகுத்தாலும் சின்ன சலசலப்பு கூட கேட்காது அது என்ன?

## இராணுவ சேவையில் தேனீக்கள்



தேனீக்கள் தேன் தவிர வெடி மருந்தைக் கண்டுபிடிக்க உதவுகிறது. இதனால் பெருமளவு தேனீக்களை அமெரிக்க இராணுவம் பயன்படுத்தி வருகிறது. கோப்பி பயிர் விளைச்சலை அதிகரிக்கவும் தேனீக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## வேக மொழி

வெகு வேகமாகப் பேசக் கூடிய மொழி பிரெஞ்சுதான். அதிகபட்சமாக ஒரு நிமிடத்தில் ஒருவர் 350 வார்த்தைகளைப் பேசமுடியும்.

## விடைகள்


**கண்டுபிடியுங்கள்**
1.நடைமேடை 2.விளக்கு கம்பம் 3.மதில்சுவர் 4.கடை ஜாடி 5.குடை 6.தலையில் பூ 7. கையில் கூடை

**விடுகதைகள்**
1.கோலம் 2.பம்பரம் 3. மஞ்சள் 4.பாம்பு 5.புடலங்காய் 6.வடை 7.மின்மினிப்பூச்சி 8.பட்டம் 9.தேன்கூடு 10.எறும்புக்கூட்டம்

## கண்டுபிடியுங்கள்

அன்புக் குழந்தைகளே!

கீழேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையே குறைந்தபட்சம் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்



'மெர்க்குரி பூக்கள்'
ஸ்ரீகாந்த் – மீராஜாஸ்மின்

# ரசிகர்களுக்கு வரப்பிரசாதம்

சூர்யாவுடன் 'மௌனம் பேசியதே...' க்குப் பிறகு நடித்த 'ஆறு' வெற்றி என்பதால், உற்சாகத்தில் மிதக்கிறார் த்ரிஷா. இது போதாது என்று, விஜய்யுடன் இணையும் மூன்றாவது படமான 'ஆதி' தனக்கு மெகா ஹிட்டா அமையும் என்று நம்புகிறாராம். 'கில்லி', 'திருப்பாச்சி' படங்களின் /லம் ஏ.பி.சி ஆடியன்ஸ் மனதை வசப்படுத்தினேன்.

விஜய்க்குப் பொருத்தமான ஜோடி என்று மீடியாக்கள் எழுதின. இப்போது 'ஆதி'யும் எல்லா சென்டர்களிலும் பட்டையைக் கிளப்பும். குறிப்பாக, பாடல் காட்சிகளில் விஜய்க்கு ஈடு கொடுத்து ஆடியுள்ளேன். குத்துப்பாட்டு ரசிகர்களுக்கு இந்தப் படத்தின் பாடல்கள் பெரிய வரப்பிரசாதம் என்றார் த்ரிஷா. தமிழத் திரையுலகுக்கு இவரே ஒரு வரப்பிரசாதம் தானே...

# ப்பூ... அதெல்லாம் சும்மா

செல்வராகவன் இயக்கத்தில் 'புதுப்பேட்டை'யில் நடிக்கும் தனுஷ், கரு.பழனியப்பன் இயக்கத்தில் நடிக்கும் 'அசோகமித்ரன்' படத்துக்கு பெப்ரவரி மாதம் கால்ஷீட் கொடுத்துள்ளாராம். இதற்கிடையே 'திருவிளையாடல்' படத்தை முடிக்கலாம் என்று நினைத்தால் ஸ்ரேயாவின் கால்ஷூட்டுக்கள் ரஜினியின் 'சிவ்வாஜி'க்குச் சென்றுவிட்டது. அதனால்தான் 'திருவிளையாடல்' படத்தில் ஸ்ரேயா நடிக்கவில்லை என்பதுபோல வதந்தி உலவுகிறதாம்.

இது பற்றி தனுஷிடம் விசாரித்தால், 'ப்பூ... அதெல்லாம் சும்மா நம்பாதீங்கண்ண' என்கிறார். சம்பந்தப்பட்டவரே சொன்னால், அது சரியாகத்தான் இருக்கும்.

# தமிழ்ப் படங்களில் நடிக்க நிலாவுக்கு தடை!



நடிகை நிலாவுக்கு சினிமாவில் நடிக்கத் தடை விதித்துள்ளது தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கம். பிரசாந் ஜோடியாக நிலா 'ஜாம்பவான்' படத்தில் நடித்தார். குற்றாலத்தில் நடைபெற்ற ஷூட்டிங்கின்போது திடீரென யூனிட்டில் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஹோட்டல் அறையில் இருந்து நிலா ஓட்டம் பிடித்ததால் ஷூட்டிங் பாதியில் நின்றது. இந்தச் சம்பவம் தமிழ் சினிமா உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

நடிகை ஓட்டம் பிடித்தது குறித்து ஜாம்பவான் படத்தின் தயாரிப்பாளர் சத்யா தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் கவுன்சிலில் புகார் அளித்தார். அதில் குளியல் அறை காட்சியில் நடிக்கத் தொட்டி நிறைய மினரல் வாட்டர் நிரப்பச் சொல்லி அடம்பிடித்தார். தெலுங்குப் படத்தில் அதிக பணம் கிடைக்கும் என்பதால் அந்தப் படப்பிடிப்புக்குச் செல்ல நிலா நாடகமாடுகிறார் என்று குறிப்பிட்டுள்ளார். ஒப்பந்தத்தில் கையெழுத்துக் கேட்டு என்னை மிரட்டினார்கள். இனி அந்தப் படத்தில் நடிக்கவே மாட்டேன் என்று நிலா பேட்டி அளித்தார். இந்நிலையில் கவுன்சிலுக்கு வந்த புகார் குறித்து தலைவர் தியாகராஜன், செயலாளர் ஏ.எல்.அழகப்பன் ஆகியோர் 'ஜாம்பவான்' யூனிட்டில் இருந்தவர்களிடம்,தனித்தனியாக நடந்த சம்பவம் பற்றி விசாரித்தனர்.

இந்தச் சம்பவத்தில் கவுன்சிலின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து செயலாளர் ஏ.எல்.அழகப்பனிடம் கேட்டபோது,


ஷூட்டிங் ஸ்பாட்டில் இருந்து திடீரென சொல்லிக்கொள்ளாமல் சென்ற நடிகை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என பட தயாரிப்பாளர் புகார் அளித்திருக்கிறார். அந்தப் புகாரின்பேரில் யூனிட்டில் உள்ளவர்களிடம் என்ன நடந்தது என்று விசாரித்தோம். அந்தப் பெண் (நிலா) சொல்வதுபோல படத் தயாரிப்பாளரோ, இயக்குனரோ தவறாக நடந்துகொள்வில்லை. அவரை மிரட்டவும் இல்லை. அந்த நடிகை சொல்வது அத்தனையும் பொய் எனத் தெரிந்தது. தயாரிப்பாளருக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிற நடிகை நிலா இனி தமிழ்ப் படங்களில் நடிக்க முடியாதபடி கவுன்சில் தடை போட்டிருக்கிறது.

இங்கே ஏதேதோ சொன்னதோடு, இனி நடிக்கவே மாட்டேன் என்று சென்ற அந்த நடிகை தெலுங்கில் ஒரு புதுப்பட பூஜையில் கலந்துகொண்டிருக்கிறார். தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் கவுன்சில் சார்பாக தெலுங்குப்பட அதிபர்கள் சங்கத்தில் புகார் அளித்திருக்கிறோம். தெலுங்கிலும் அந்த நடிகைக்குத் தடை விதிக்க வேண்டும் என்று அந்தப் புகாரில் சொல்லியிருக்கிறோம். தயாரிப்பாளர் மீது அபாண்டமான புகாரைச் சொல்லி அனுதாபத்தைத் தேட முயற்சிக்கிறார் என்றே யூனிட்டில் இருந்த பலரும் என்னிடம் சொன்னார்கள். பலநாள் ஷூட்டிங் நடத்தி பல லட்சத்தைத் தயாரிப்பாளர் செலவு செய்திருக்கிறார். இப்போது திடீரென நடிக்கமாட்டேன் என்றெல்லாம் அந்த நடிகை சொல்லிவிட முடியாது. தயாரிப்பாளருக்கு இழப்பு ஏற்படாதவகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார் அழகப்பன்.



'பாரிஜாதம்'
சரண்யா

# சத்யராஜின் குருக்ஷேத்திரம்



'அறிந்தவன்' 'எஸ்.ஐ. ராஜேந்திரா' ஆகிய டப்பிங் படங்களையும் கன்னடத்தில் ஏராளமான படங்களையும் தயாரித்துள்ள ராஜேந்திரா மூவீஸ் சார்பில் தயாராகும் படம் 'குருஷேத்திரம்.'

சத்யராஜ், ரோஜா, ராஜேந்திரா, பாரதிமணி, நாசர், தலைவாசல் விஜய், குட்டி பத்மினி நடிக்கின்றனர்.

வெளிநாட்டில் வாழும் இந்தியரான சத்யராஜ், தாய் நாடு திரும்புகிறார். இங்கே சில அந்நிய சக்திகள் தீவிரவாதம் வளர்த்துக் கொண்டிருப்பதை அறிந்து வெகுண்டெழுகிறார். அவர்களைத் தீர்த்துக்கட்ட திட்டம் ஒன்று தீட்டுகிறார். அந்தச் சண்டைக் காட்சி சமீபத்தில் ஏற்காட்டில் படமாக்கப்பட்டது.

ஒளிப்திவு: கருப்பையா, இசை: ஐஸக் தாமஸ், படத்தொகுப்பு: சுரேஷ் அர்ஸ், சண்டைப் பயிற்சி: இந்தியன் பாஸ்கர். நடனம்: பாலாஜி, தயாரிப்பு திரைக்கதை வசனம், இயக்கம்: ஜெயபாரதி.

# திருப்புமுனை

'பரமசிவன்' படத்தில் ரஜினி பார்முலாவில் அஜீத்தை நடிக்கவைத்திருக்கிறேன்.

இந்தப் படத்துக்குப் பிறகு அஜீத்துக்குத் தனி மரியாதை உருவாகும். அஜீத் 'பஞ்ச்' வசனங்களும் பேசுகிறார்.

அஜீத் பாத்திரத்துக்கு என்ன தேவையோ அத்தனையும் பரமசிவனில் உண்டு. அஜீத்துக்கு இந்தப் படம் திருப்புமுனையாக இருக்கும். இப்படி சொல்பவர் டைரக்டர் பி.வாசு.

நடிகை ஜானவி கழுத்தில் தாயத்து அணிந்திருக்கிறார்

* * *

'இது கொஞ்சம் புதுசு' படம் தமிழ், தெலுங்கு இரண்டு மொழிகளிலும் ஒரே நேரத்தில் தயாராகி வருகிறது.



டான் சேரா
ரஞ்சித் – சுஜிபாலா

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?

## பன்னிரு இராசிகளுக்கும் ஒக்டோபர் மாதத்துக்குரிய பலன்கள்

(தொடர்ச்சி....)

| | | | |
|---|---|---|---|
| | | | |
| ரா | ஒக்டோபர் ராசி நிலை | | சனி |
| | | | கே |
| | குரு | பு | சூ சு செ |

### மேடம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1)

தொழில் வழி கடன் சில வகையில் உங்கள் கௌரவத்துக்கு அச்சுறுத்தல் செய்வதாக இருக்கும். கடன் வழக்கு போன்ற வகைகள் இதுவரை கட்டுப்பட்டே இருக்கின்றன என்றாலும் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கொடுக்கல், வாங்கல் மிதமான போக்கில் இயங்கி வருகின்றன. அரசாங்க வகை மனிதர்கள் உங்களுக்கு இணக்கமாக இருப்பார்கள் என நம்பவேண்டாம். சூரியன் சாரம் பெற்ற குரு என்பதை மறக்கக் கூடாது. குழந்தைகள் ஆரோக்கிய வகையில் சிறு சிறு மருத்துவச் செலவுகள் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கும். பெண்கள் வகையில் புதிய போக்கு இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு மேல்மட்ட மனிதர்கள் மூலம் இருந்து வந்த அரிப்பு குறைந்துவிடும். கடிதம் மூலம் எதிர்பார்த்த மகிழ்ச்சியான தகவலை அறியவேண்டி இருக்கும். திருமணம் திடீரென கூடி வந்துவிடும். பிரயாணம் குறித்தபடி நன்மையளிப்பதாக இருக்கும். பொலிஸ், இராணுவ பணியாளர்களுக்கு பதவி உயர்வு பாராட்டுக்களும் கிடைக்கப்பெறும். தனநிலையில் தனி ஒரு போக்கு இருக்கும். செலவு எத்தனை ஆனபோதிலும் தனவரவு தாராளமாகவே இருக்கிறது. தொழில் வழியில் உங்கள் வேகம் அதிகரித்து இருப்பது கண்டு நண்பர், உறவினர்கள் உங்களை பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். தொழில் வகைக்கு இயந்திரக் கருவிகள் வாங்குவது, புதிய இடத்தில் அமைத்தல் போன்றவையும் உண்டாகும். சகோதர வகை இயக்கம் இப்போது அனுகூலமாக இருக்கும். தூரத்து வழி மனிதர்கள் தொழில் வகைக்கு மிகவும் நெருங்கியவர்களாக இருப்பர். பூர்வீக சொத்து வழியில் இருந்து வந்த தடைகளை அகற்ற தன்னம்பிக்கை கொள்ளும் மாதம். வழக்கு மட்ட மனிதர்களின் சந்திப்பு இடமாற்றம் பிரச்சினைக்கு தீர்வு காண வைக்கும். கணவன், மனைவி உறவு இனிப்புதான். கல்யாணம், காதல் விஷயங்கள் மனத்திருப்தி அளிப்பதாகவே இருக்கும். புது உடைச் சேர்க்கையும் உண்டாகும். தற்போது உங்கள் அவசர காரியங்கள் எல்லாம் முடித்து வைக்கக்கூடியவன் குரு. குடும்ப நண்பர்கள், உறவினர் வருகையும் குடும்பத்தில் விருந்து செலவுகளை உண்டாக்கும். கொடுக்கல், வாங்கல் தாராளமாக அமைந்திருக்கும். இப்போது எழுத்து வகை நன்மையும் இருக்கிறது. மூன்றாவது மனிதருக்கு வேண்டி பிரயாணம் ஏற்பதும் உண்டாகும். கடன் இருந்தும் பாதிப்பு இல்லை. வழக்கு இருந்தாலும் வேகமில்லை. குழந்தைகள் வகையிலே சுபச்செலவுகளும் இருக்கின்றன. சிலருக்கு எப்போதே கொடுத்த வைத்த பணம் இப்போது வந்து சேரும். குடும்ப வகைக்கு புது உடை அணிகலன்கள் சேர்க்கையும் உண்டாகும். இப்போது நீங்கள் கட்டடம் கட்டுவது, கட்டிய இல்லம் புதுகுடி போகுதல் போன்ற பெரிய சுபநன்மைகள் இருக்கின்றன. நீங்கள் தைரியம் குறைந்தவர்களாக ஆகிவிட்டீர்கள். சனி நல்லவன்தான் என்றாலும் சுக்கிரன் சூரியனுடன் நின்றது சில அவசர பிரச்சினைகளை உடனே தீர்க்க வேண்டிய அவசியத்தை உண்டாக்கிவிட்டான். இப்போது உங்கள் சொல் சித்தி பெறும். மற்றவர் பாராட்டு மூன்றாவது மனிதர்களிடத்தில் பொறாமையை உண்டாக்கும். உங்கள் கருத்தை அறிய மற்றவர் காத்திருப்பர்.

### ரிஷபம்
(2,3,4 கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2)

இப்போது குரு ஏழாவது வீட்டிற்கு வந்தது உங்களுக்கு சில தீய சக்திகளிடமிருந்து விடுதலை கிடைக்கும். அதிகாரிகள் உங்களுக்கு இணக்கமான போக்கில் இயங்குவர். குழந்தைகள் தேக ஆரோக்கியம் நன்றாகவே இருக்கிறது. காது, நரம்பு இந்தப் பகுதி பாதிப்பதால் சிகிச்சை அவசியமாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்றவைகளில் முன்னேற்றம் இல்லை. பிரயாணம் அதிகம் இல்லாதபோதும் முக்கியஸ்தர்கள் சந்திப்பும் இப்போது பயன் தராது. எனவே நிதானம்தான் இயங்குவீர்கள். தொழில் வழியில் மந்தமின்றி சீரான போக்கு உடையவர்களாக இருப்பீர்கள். தனநிலையிலும் ஓர் அளவு சுமாரான போக்கு இருக்கிறது. நல்ல ஆகாரச் சேர்க்கையும் குறிப்பிடத்தக்கது. கணவன், மனைவி உறவில் சிறு சலனம் தோன்றும். இக்காலம் உங்கள் தேக நலனைக் கவனிக்க வேண்டி இருக்கிறது. சிலர் இரத்த அழுத்தம், வயிற்றுப்புண் போன்றவைகளினால் பாதிக்கப்பட்டு சிகிச்சையும் அவசியமாகலாம். பெண்கள் கருவுற்றிருப்பார்கள். குழந்தைகள் பிறக்கும் வரை மிகவும் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம். சமூகப் போக்கை கடைபிடிப்பது அவசியம். குழந்தை வகை முன்னேற்றம் இருக்கிறது. கடிதம் மூலம் கவர்ச்சிகரமான விஷயங்கள் அறிய வரும். காது, பல் நோய் பாதித்து நீங்கும். சனியைப் பார்க்க. இடமாற்றம் குடும்பத்தில் சபதத்தை முடிப்பது போன்ற நன்மைகளை செய்து கொடுப்பவனுங்கூட. கொடுக்கல் வாங்கலில் கண்ணியத்தை ஒரே சீராக கொண்ட வர முயற்சிக்கவும். அலைச்சல், அகால உணவு, அகால உறக்கமும் உண்டாகும். எதிர்பார்த்த பணம் வந்தாலும் பற்றாக்குறையோடு இருக்கிறது. இப்போது பழைய நண்பர்களைச் சந்தித்து புதிய ஆலோசனைகளைப் பெறுவது அவசியமாகும் என்றாலும் எதிலும் நீங்கள் நிதானத்தை இழக்கக்கூடாது. தொழில் வழியில் உள்ள உடனிருக்கும் மனிதர்கள் உங்களுக்கு இணக்கமாக இல்லை. பணம் கொடுக்கல் வாங்கலில் வார்த்தையைக் காப்பாற்ற முடியவில்லை. சிலருக்கு குடும்ப ஸ்தான சூரியன், புதன், ராகு திருமணம் போன்ற விஷயம் முடியும் தருவாயில் தடை உண்டாக்குவர். மாணவர்களுக்கு கல்வி உயர்வு இருக்கிறது. குடும்ப சொத்து பிரச்சினை முக்கிய அங்கம் வகிக்கும். வாகனச் செலவு பிரயாணச் செலவுகள் அவசியமுடையதாகவே இருக்கின்றன. கொடுக்கல், வாங்கலில் இப்போது உயர்வு பெற்றிருப்பதால் குறித்த காரியங்கள் உங்களுக்கு வெற்றி தரும் என்பதில் சந்தேகமில்லை. அரசாங்க மனிதர்களின் சந்திப்பு அவசிய எழுத்து நன்மைக்கு வழிவகுக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடும். குடும்ப உறவில் நடக்கு சுபவிசேடங்களுக்குச் செல்வது, செலவுகளும் இருக்கின்றன. இந்தப் பிரிவு மனிதர்கள் தன் அந்தரங்க விஷயங்களை மற்றவர் அறிவதால் சிலசமயம் தெளிவில்லாத போக்கும் இருக்கும் என்றாலும் சரிசெய்து விடுவீர்கள்.

### மிதுனம்
(மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)

தாய்வழியில் நடக்கும் விஷேடங்களுக்கு பிரயாண முக்கியத்துவம் உண்டாகும். தூரதேச கடிதம் வருவது பழைய விஷயங்கள் சிலவற்றைப் புதுப்பிக்க உதவியாக இருக்கிறது. மேலும் புத்திரர், புத்திரியர்கள் கல்வி, ஆரோக்கியம் இவைகள் சிறப்புற்று விளங்கும். சகோதர வகையில் சிறு இடைவெளி உண்டாகும். தனம் கொடுக்கல், வாங்கல் வேகமாக இல்லையே தவிர, காரிய சாதனை மெல்ல நடந்து கொண்டுதான் இருக்கும். குடும்பத்து சொத்து சம்பந்தமான வழக்கு அலைச்சல், செலவுகள் கொடுத்துக்கொண்டே இருக்கும். இப்போது ராகு குடும்பத்திலும்கூட இடை இடையே கசப்பான அனுபவத்தை உண்டாக்கும். போட்டி, பந்தயம், லாட்டரி போன்ற வகைகள் ஈடுபாடு வேண்டாம். அது வழி பணவிரயம்தான் உண்டாகும். புத்திரர்கள் வகையில் கருத்து வேறுபாடும், சலனமான போக்கும் இருக்கும். அரசியல்வட்டாரத்தினரின் தொடர்பு தொடர்ந்து அலைச்சலையே உண்டாக்கும். சில வகையில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு இருக்காது. உடனிருப்பவர்கள் மாறுபட்ட கருத்து உடையவர்களாக இருப்பர். மன திருப்தியான போக்கு உள்ள காலம் என்று கூறமுடியாது. இப்போது நீங்கள் தொழில் நிமித்தம் அலைச்சல் உடையவர்களாக இருக்கிறீர்கள். இதனால் தேக ஆரோக்கியமும் பாதிக்கப்படுகிறது. இதை உணர்ந்து எதிலும் அளவோடு இருக்கவேண்டும். கவர்ச்சியான கடிதங்களும் கிடைக்கப்பெறுவீர்கள். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இடமாறுதல் இல்லை என்றாலும் இலாகா மாற்றம் உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகள் நன்றாக இருக்கின்றன. வெளியூர் பிரயாணம் அடிக்கடி இருக்கும். சத்ருக்கள் நேர்முகவழி உங்களை ஒன்றும் செய்யாது கண்ணியம் உடையவர்களாக இருப்பீர்கள். கொடுக்கல், வாங்கலில் புதிய திருப்பத்தைப் பெறலாம். வரவேண்டிய பணம் சற்று காலம் கடந்து வந்தாலும் நல்ல நேரத்திற்கு பயன்படுவதாக இருக்கும். போட்டி, விளையாட்டு நிகழ்ச்சிகள் திருப்தியளிக்கும். உங்கள் போக்கு மற்றவர்களால் பாராட்டுப் பெறக்கூடியதுதான். சிலவழி நன்மை இல்லைதான் என்றாலும் சனி சாரம் பெற்றவன் என்ற சமாதானத்தைக் கூற முடியாது நண்பர்கள் ஆதரவு நல்கிடும் என்பதில் சந்தேகமில்லை. செய்தொழில் வகையில் நாட்டம் செலுத்துங்கள். லாட்டரி, போட்டி, பந்தயத்தை நம்பி ஏமாற வேண்டாம். 10இல் குரு பற்றி பயம் வேண்டாம். இனி தேக சுகம் அதிகரிக்கும். உடல் வீரிய விருத்தியுடையவராக விளங்குவீர்கள். அமைதியான போக்கு நிலவி வரும். தொழில் கூட்டு மனிதர்களிடமும் இப்படியே சிலர் அந்நிய நாட்டு பிரயாணத்தை மேற்கொள்ள அவசர முயற்சி உடையவராக இருப்பர். குடும்பம் சிலருக்கு ஜலபிரதேச மனிதர்கள் மூலம் தன உபகாரம் கடைசியில் கிட்டும். உயர் அதிகாரிகளை சந்திப்பதும் உண்டாகும். நெருக்கடி நிலையில் வரவு செலவு குறைவாகத் தெரிகிறது.

### கடகம்
(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

கணிசமான அளவு தனசேர்க்கை இருக்கும். மாணவத மாணவியர்களுக்கு கல்வி நன்றாக இருக்கும். உங்கள் முன்னேற்றம் படிப்படியே உயர்ந்துகொண்டே வரும் என்பதில் சந்தேகமில்லை. உடனிருப்பவர் கூட்டு மனிதர்களின் போக்கு மனத்திருப்தி அளிப்பதாக இருக்கும். சிலர் இயந்திரம், இரும்பு மூலமாக பெரிய ஆதாயத்தைப் பெறுவீர். இந்த நேரத்திலும் லாட்டரி, ரேஸ் போன்றவைகள் தேவை இல்லை. இது உங்களுக்கு விரயத்தைதான் உண்டாக்கும். உத்தியோகப்பிரிவினருக்கு இப்போது எந்தவிதமான நெருக்கடியும் இல்லை. ஆனால் விரயத்து குரு அடிக்கடி கவனமறதியை உண்டாக்கும். தொழில் உயர்வு நன்றாக இருக்கும். இப்போது மற்ற கிரகங்களின் சஞ்சாரம் அனுகூலமாக இருப்பதால் கல்வி பாதிக்காது. மேலும் இப்போது மற்ற கிரகங்களின் சஞ்சாரம் அனுகூலமாக இருப்பதால் பிரயாணம் அடிக்கடி உண்டாகும். இதற்கு முக்கிய காரணம் மற்றவர்கள் இல்லத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளும் இருக்கும். இந்த செலவு ஆண், பெண் இருபிரிவினருக்கும் உண்டாகக்கூடியதுதான். தொழிலை பொறுத்த மட்டில் திருப்தியாகவே இருக்கும். தூரதேச கடிதத் தொடர்புங்கூட இருக்கவே செய்யும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு பதவி உயர்வும், பழைய இடத்துக்கு மாற்றலும் உண்டாகும். குடும்பத்தில் திருப்தியான போக்கு இருக்கிறது. புத்திரர், புத்திரியர்கள் கல்வி, ஆரோக்கியம் திருப்தியாகவே இருக்கின்றன. கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு முன்பு செய்து வைத்த வேலைகள் சில முடிவு பெறலாம். அப்படியே இருக்கும்போது புதிய முயற்சியில் ஈடுபடக்கூடிய சூழ்நிலையும் வாய்ப்பும் உருவாகிவந்துவிடும். இப்போது உணவுப் பொருள் வியாபாரம் செய்கிறவர்களுக்கு நல்ல அதாயம் இருக்கும். சிலர் இப்போது வெளிநாட்டுப் பிரயாணத்தை மேற்கொள்வதும் இருக்கும். குழந்தைகள் ஆரோக்கியம் சம்பந்தமாக மருத்துவமனை சென்றுவருவது அவசியமாகும். பல், காது போன்ற அங்கங்களில் உங்களுக்கு பாதிப்புதரவும் வாய்ப்பு இருக்கிறது. கல்யாணம், காதல் சம்பந்தமான கடிதத் தொடர்பு கனிந்து கனியாக வந்து விடும். பணம் கொடுக்கல், வாங்கல் பரிவோடு நடக்கும். வேலைகள் மட்டும் குறித்தபடியே முடிக்கப்பெறும். கூட்டுத் தொழில் உள்ளவர்களுக்கு தனநிலை ஓர் அளவு திருப்தியாகவே இருக்கும். அரசியல்வாதிகளுக்கு கௌரவச் செலவுகள் வந்துவிடும். கடன் வரவேண்டியது வராது. ஒப்பந்தம் செய்வது போன்றவைகள் ஏற்படுத்தும். வயதில் மூத்தவர்கள் ஆரோக்கியத்தைக் கவனிக்க வேண்டும். மருந்து நிலையம் போய்வருதல் அவசியமாகும். கொடுக்கல், வாங்கல் வேகம் அதிகரித்து இருக்கின்றன. கொடுத்து வைத்த பணம் உங்கள் செலவுக்கு ஏற்றதுபோல் ஒரு பகுதி உதவியாக வந்துசேரும்.

### சிங்கம்
(மகம், பூரம், உத்தரம் 1)

பூர்வீகச் சொத்துக்கள் விற்பது தனவரவு கடன் அடைத்தல் போன்றவைகள் உண்டாகும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு திருப்தி இல்லாத இலாகா மாற்றம் உண்டாகும். இதனால் ஆரம்பத்தில் மனம் அமைதியற்று இருந்து பின் தெளிவடைந்துவிடும். சிலசமயம் வேறு காரியங்களுக்காக நீங்கள் மேல் அதிகாரிகளைச் சந்திக்க வேண்டிதான் இருக்கின்றன. சுமூகமான பேச்சுக்கள் இடம்பெறும். இதற்கு மேல் உங்கள் சோர்வுகள் நீங்கிவிடும். வெளியாரின் தொடர்பு ஈடுபாட்டுக்கு அவசியமில்லை. இப்போதுதான் வழக்குகள் கடன் பிரச்சினைகள் நீங்கும். குடும்பத்தில் சிலருக்கு பாகப்பிரிவினை சம்பந்தமான பேச்சுக்களும் இடம்பெறும். நிதானமாக செயல்பட வேண்டும். கிரகங்களின் நன்மை, உங்கள் காலச் சக்கரத்தை அனுகூலமாக்கி இருப்பதால் இந்த நேரத்தைப் பயன்படுத்தி முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொள்வதுதான் சிறப்பு. பணம் கடன் பெறுவது இருந்து போதிலும் வெற்றிடும். வழக்குப் பற்றிய பயம் வேண்டாம். சிலர் வகையில் எழுத்து மூலம் ஆதாயமும் உண்டாகும். ரேஸ், லாட்டரி மூலமும் சிலர் தனவரவை அடைவர். உறவினர் வழியில் சில உபகார நன்மைகளும் இருக்கின்றன. புதிய முயற்சியும் பலன்தரும். சுபம் விஷயம் குறித்த கடிதப் போக்குவரத்து கவர்ச்சிகரமாகவே இருக்கும். பழைய வாகனங்களை மாற்றி அமைத்தல், சிலர் புதிய வாகன சேர்க்கையைப் பெறுவதும் உண்டாகும். இக்காலம் உல்லாச பிரயாணமும் இடம்பெறும். குழந்தைகள் ஆரோக்கியம், கல்வி இந்த வகையில் அதிகமான கவனம் செலுத்தவும். தொழில் வழியில் எவ்வளவு வேகம் இருந்தாலும் ஆதாயம் குறைவுதான். அலைச்சல், அகால உறக்கம், தேக உஷ்ண அசௌகரியம் உண்டாகும். அரசாங்க உயர்மட்ட மனிதர்களின் சந்திப்பு அவசர பிரச்சினைகள் முடிப்பதற்கு அவசியமாக இருக்கும். முற்பகுதியில் இருந்ததைவிட மாதம் நடுப்பகுதியிலிருந்து மனத்தெளிவு தூரத்து சந்தோசச் செய்தியை அறிதல் போன்ற நன்மைகள் இருக்கும். பிரயாணம் மேற்கொண்டது திருப்தி இல்லாதது, கடமைகளைச் செய்ய தடைகள் இருக்கின்றன. கவனமறதி மனதை ஒருநிலைப்படுத்த முடியாமை என்பது அதிகமாக இருக்கிறது. இதனால் உரிய காலத்தில் உரியதை செய்ய முடியாது. எழுத்து ஒப்பந்தம் போன்றவைகளும் காண்ட்ராக்ட் தொழில் உள்ளவர்களுக்கு சிக்கலாகவே இருக்கும். கணவன், மனைவி வகையில் மனவேற்றுமைக்கு இடமளிக்க வேண்டாம். தொழில் கூட்டு மனிதர்களிடம் இருந்துவந்த சந்தேகத்தை போக்குவது உங்கள் கடமைகளில் ஒன்றாகும். சந்தேகக் கண்களோடு பார்த்தது இப்போது தெளிவடையும்.

### கன்னி
(உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2)

மாற்றம் பெற்ற ராகு-கேது, குரு பகவானும் இடமாறுதலுக்கு வழிவகுப்பர். தன உயர்வு தூரத்து சந்தோஷச் செய்தி உங்களைத் தேடி வரும். குடும்பத்துடன் சுப விஷேடங்களில் கலந்து கொள்வதும் குறிப்பிடத்தக்கது. அதேபோல் விருந்து உண்டு. கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு கண்ணியத்தை உயர்த்திக் கொள்ளும் காலமிது. தனவரவு தேவையைப் பூர்த்தி செய்யும். இல்லத்தில் தேங்கி இருந்த வேலைகள் இப்போது பூர்த்தியடையும். வெளிநாட்டு வர்த்தகம் உள்ளவர்களுக்கு வெகு சிறப்பான காலமாக இருக்கும். குடும்ப முன்னேற்றமும் குறிப்பிடத்தக்க அளவு சிறப்பாக இருக்கும்.சாதாரண ஜீவன நிலையில் உள்ளவர்களுக்கு இந்த காலம் ஒரு திருப்பத்தை உண்டாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. நன் முடிவுக்கு கொண்டுவரும் காலம். திருமணம் போன்ற சுப விஷயங்களுக்கு முடிவு காண்பதும் உண்டாகும். சிலர் தூரதேச பிரயாணம் மேற்கொள்வது, பணம் கடன் பெறுவது போன்ற அவசியம் உண்டாகும். கடன் வழக்கு சத்ருக்கள் பலம் கட்டுக்கு அடங்கியதாகவே இருக்கிறது. புதியதாக உத்தியோகம் பதவி பொறுப்பை ஏற்பவர்களுக்கு வேறு இடமாறுதல் என்பது உடனே இருக்கும். ஒரே சீரான போக்கிலே இயங்கிவரும். அரசியல் மனிதர்களைவிட நீங்கள் திறமைசாலிகளாக இருப்பீர்கள். சில முக்கிய உத்தரவை பெறுவதற்கு செலவின்றி காரிய சாதனை புரிந்து விடுவீர்கள். உங்களுக்கு தொடர்ந்து நன்மைகள் இருக்கின்றன. செம்பொன் ஆபரணங்களும், காணாமல்போன பொருளும் கிடைத்துவிடும். புத்திரர், புத்திரியர்கள் வகை அவசிய செலவுகள் இருக்கின்றன. பெண்கள், புத்திரியர்கள் வகை நடைமுறை எச்சரிக்கை அவசியமாகும். குடும்பத்தில் சில சுப காரியங்கள் அடையவும் கூடும். இதனால் ஏற்படும் மன அதிர்ச்சி மற்றவர்கள் மீது சீற்றத்தையும் உண்டாக்கும். பொறுமைதான் மிகவும் அவசியம். இக்காலம் பிற்பகுதி முற்போக்கான சூழ்நிலை உதயமாகிக்கொண்டே வரும். புத்திரர், புத்திரியர்கள் கல்வி மேன்மைகளுக்கும் குறைவு இல்லை. கடிதத் தொடர்பு கவர்ச்சியாக இருக்கின்றன. உங்களுக்கு குருவும் சனியும் கூட்டு நன்மைகளைச் செய்யக்கூடியவர்கள் என்பதை மறவாதீர். செய்தொழிலில் திருப்தியான போக்கு இருப்பதை உணரலாம். தனநிலை, குடும்ப நிலையும் இனிமையான போக்கை அதிகரிக்கச்செய்யும். கல்யாணம், காதல் கடிதத் தொடர்பு கண்ணியம், கவர்ச்சி உடையதாக இருக்கிறது. கடைசியில் மட்டும் குடும்பத்தில் பிணக்கு சலன நிலையும் உண்டாகும். கலைப்பிரிவு எழுத்தாளர்கள் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பாராட்டுக்கள் கிடைக்கப்பெறும். மாணவ, மாணவிகள் கல்வி தரம் உயர்வு, உறவினர் நண்பர்களாலும் பாராட்டுப் பெறுவர்.

## இன்று ஒரு தகவல்

# அந்த ஐந்து பேர்

இந்த ஆள் மாதிரி இந்த உலகத்தில் வேறு யாரையும் பாாக்க முடியாது சார்... இவர் கோடியில் ஒருவர் சார்! என்று சில பேரை அறிமுகப்படுத்துவது உண்டு. அப்படியென்றால் என்ன அர்த்தம்? அந்த ஆள் அபூர்வமான ஆசாமி என்று அர்த்தம். அருமையிலும் அருமையானவர் என்று அர்த்தம்.

இந்த உலகத்தில் அருமையிலும் அருமையானவர்கள் ஐந்து பேர் உண்டு என்கிறார் ஒரு பெரியவர். யார் அந்த ஐந்து பேர். தன்னுடைய சரக்கின் கெடுதியையும் கூறும் வியாபாரி. புகழை விரும்பாத கொடையாளி. மாற்றைக் குறைத்துச் சொல்லாமல் பொன் வாங்கும் வணிகர். எந்தவித இலஞ்சமும் வாங்காத உத்தியோகஸ்தர். தண்டனையை நியாயம் என்று ஒப்புக்கொள்ளும் குற்றவாளி. இந்த ஐந்து பேரும் அருமையிலும் அருமையானவர்கள்.

பின்னே இல்லையா? தன்னுடைய சரக்கின் கெடுதியைக் கூறும் வியாபாரி யாராவது உண்டா? உளுத்தம் பருப்பு ஒரு கிலோ கொடுங்கள் என்று கேட்கிறீர்கள். 'வேண் டாம் சார்.... எங்கள் கடையில் இருக்கும் உளுத்தம் பருப்பு மகாமட்டம். எதிரில் ஒருவன் கடை வைத்திருப்பான் அவனது கடையிலிருந்து அற்புதமான சரக்கு அங்கே போய் வாங்குங்கள்' என்று யாராவது சொல்வார்களா? சொன்னால் அந்த ஆளுக்குப் புத்தி சரியில்லை என்று நினைப்போம்.

அதே மாதிரித்தான் புகழை விரும்பாத கொடையாளி இந்தக் காலத்தில் கொடையாளி ஆவதே புகழுக்காகத் தானே. இடதுகை கொடுப்பது வலது கைக்குத் தெரியக் கூடாது என்பார்கள். ஆனால் இன்று எதைக் கொடுத்தாலும் இரண்டு கையாலும் சேர்த்துக் கொடுத்துப் படம் பிடித்துக் கொள்கிறோம். இடது கை வாங்குவது வலது கைக்குத் தெரியக் கூடாது என்று வேண்டுமானால் சொல்லலாம் . அது இந்தக் காலத்துக்குப் பொருத்தமாக இருக்கும். மூன்றாவது அபூர்வமான ஆசாமி.. மாற்றைக் குறைத்துச் சொல்லாமல் பொன் வாங்குபவர் கூட்டிச்சொல்லி வாங்கினால் அவரது நிலைமை என்னாவது? அடுத்ததாக உள்ள அபூர்வமானவர் யாரென்றால் எந்த விதமான இலஞ்சமும் வாங்காத உத்தியோகஸ்தர். உத்தியோகஸ்தர் என்றாலே அதற்கு நமது விளக்கம் என்ன தெரியுமா? இலஞ்சம் வாங்குவதற்குப் பல உத்திகளை தெரிந்து வைத்திருப்பவர். அதனாலேயே அவர் யோகஸ்தர். அதுதான் உத்தியோகஸ்தர். அப்படி ஆகிவிட்டது காலம்·என்ன செய்வது இன்று உலகத்தில் இலஞ்சம் வாங்காமல் கூட எப்படியாவது இருந்து விடலாம். ஆனால் இலஞ்சம் கொடுக்காமல் யாரும் காலம் தள்ளமுடியாது போலிருக்கிறதே. இலஞ்சம் கொடுப்பதென்றாலும் சரி வாங்குவதென்றாலும் சரி அதற்கு இந்தக் காலத்தில் சிபார்சு வேண்டும் சார்.

அருமையானவர்களில் ஐந்தவது ஆசாமி யார் தெரியுமா? தண்டனையை நியாயம் என்று ஒப்புக்கொள்ளும் குற்றவாளி. 'எனக்கு நீதிமன்றில் பத்துவருடம் கடுங்காவல் தண்டனை என்று தீர்ப்பளித்தார்கள் சார். அது மிகவும் நியாயமான தண்டனைதான். அந்தத் தண்டனையைக் கொடுத்த நீதிபதி எனக்குக் காவல் தெய்வம் மாதிரி. இந்தத் தண்டனை அவர் எனக்குப் போட்ட பிச்சை' என்றா சொல்லிக் கொண்டிருப்பான்.

இப்படியெல்லாம் ஆட்களைப் பாா்ப்பது மிகக் கஷ்டம். அப்படி யாராவது எங்கேயாவது கண்ணில் பட்டால் அவர்கள் அருமையிலும் அருமையானவர்கள்தான். அதில் சந்தேகமில்லை.

ஒருவர் ஒரு கௌரவமான உத்தியோகத்தில் இருந்து கொண்டு இலஞ்சம் வாங்கினார். 'ஏன் சார் இவ்வளவு கௌரவமான உத்தியோகத்தில் இருந்துகொண்டு இலஞ்சம் வாங்குகிறீர்களே...இது தவறில்லையா?' என்று கேட்டேன் அவரிடம். 'இதில் தவறு இருப்பதாக நான் நினைப்பதில்லை சார். ஏனென்றால் இந்தக் கௌரவமான உத்தியோகத்தையே நான் இலஞ்சம் கொடுத்து தான் வாங்கியிருக்கிறேன்' என்கிறார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தொழில்நுட்ப பயன்பாட்டின் அவசியம் குறித்து ஜனாதிபதி வலியுறுத்தல்

(கொழும்பு)

நாட்டில் கிராமிய மற்றும் பிராந்திய அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கு தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டின் அவசியம் பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரச அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளார்.

பிரதேச நிர்வாக நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்கும் தகவல் தொழில்நுட்பத்தை விசேடமாக பயன்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு தகவல் தொழில்நுட்ப வசதிகளை அளிப்பதன் மூலம் பொதுமக்களுக்கு விரிவான சேவையினை வழங்க முடியும் என்று தெரிவித்தார்.

இந்தக் குறிக்கோளை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி குறிப்பிட்ட அதிகாரிகளை பணித்துள்ளார். (க-9)

# எப்போதும் யுத்தம் வெடிக்கலாம் என்ற மன உளைச்சலில் இராணுவம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது மாவீரர் நாள் உரையில் 2006 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப்போராட்டம்தொடங்கும் என்று அறிவித்தது முதல் ஊடகங்கள் பலவும் தாங்களே ஒரு காலக்கெடுவை நிர்ணயித் துக்கொண்டு கட்டுரைகளை எழுதி வருகின்றனர்.

சில ஆய்வாளர்கள் கள நிலைமைகள், கடந்த யுத்த காலங்கள் , புலிகளின் வியூகங்கள் என்பவற்றின் அடிப்படையிலும் ஆரூடங்களைக் கணித்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த தைப்பொங்கல் பண்டிகைகளில் முடிவில் விடுதலைப் புலிகள் யுத்தத்தை தொடங்கிவிடுவார்கள் என்ற அச்சத்தில் இராணுவத்தினர் முழு வீச்சில் யுத்தத்தை எதிர்நோக்கத் தயார்ப்படுத்தப்பட்டிருந்ததாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இரவு வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் உள்ள இராணுவத்தினர் யுத்தத்தை எதிர்கொள்ளும் வகையிலான முழுத் தயாரிப்புகளோடு உசார்படுத்தப்பட்டிருந்தனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த கடந்த ஆண்டுகளில் முதல் முறையாக இத்தகைய உசார் நிலை ஏற்படுத்தப்பட்டிருந்தது. யுத்த களத் தயாரிப்புகளில் கடைசி நிலை சிப்பாய் முதல் உயர் நிலை அதிகாரிகள் வரை தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

யுத்த கள உடைகளை அனைவரும் அணிந்து கொண்டனர். தாக்குதல் நடத்தப்பட்டால் எதிர்த்தாக்குதலை மேற்கொள்வதற்காக தளபாடங்களும் தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன.

அறிவிப்பு அறைகளும், செயற்பாட்டு அறைகளும் முழுவீச்சில் தயார்ப்படுத்தப்பட்டிருந்தன. விமானப் படை விமானங்கள் புலிகளின் பிரதேசங்களில் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தன. யுத்த தாங்கிகளும் ஆர்ட்டிலறிகளும் தயார்ப்படுத்தப்பட்டன.

வடக்கின் மிகப் பிரதான இராணுவ தளம் என்பதால் முழு உசார் நிலையில் பலாலி விமான தளம் கண்காணிக்கப்பட்டிருந்தது.

அரச படையணிகளுக்கான சங்கேத சொற்கள் பரிமாறப்பட்டன. இந்த சங்கேத சொற்கள் மாறி உச்சரிக்கப்படுகின்ற போது தாக்குதல் நடந்து விட்டதாக கருத வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கடந்த சில வாரங்களாக புலனாய்வுத் துறையினர் எந்த நேரத்திலும் புலிகள் கெரில்லாத் தாக்குதலை மேற்கொள்வார்கள் என்ற தகவல்களை அளித்து வருகின்றார்கள். ஆனாலும் எதுவித தாக்குதல்களும் அப்படி நடைபெறவில்லை. அப்படியானால் இத்தகைய முன் எச்சரிக்கைகள் ஏன்? அரச படையினருக்கு விடுதலைப் புலிகள் ஏற்படுத்தியிருக்கும் மன உளைச்சல் நடவடிக்கையா என்று படைத்தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது.

அதேபோல் கொழும்பில் ஆயுதப் பேரூந்து ஊடுருவி விட்டதாகவும் வதந்தி கிளப்பிவிடப்பட்டது. வர்த்தக மையங்களைத் தாக்கப் போவதாகவும், கல்வி நிறுவனங்களைத் தாக்கப்போவதாகவும், 5 ஆயிரம் புலிகள் ஊருடுவி கொழும்பை ஆக்கிரமித்து விட்டதாகவுமான வதந்திகள் நாளாந்தம் எழுப்பப்பட்டு வருகின்றன.

இதனால் கொழும்பின் தனியார் நிறுவனங்கள் பல ஊழியர்களை பல மாத விடுமுறையில் வீட்டுக்கு அனுப்பி வருகிறது.

அவசரகாலச் சட்ட அமுலில் இருந்தும் இத்தகைய வதந்திகளைப் பரப்புவோர் மீது ஏன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று இராணுவத்தினர் கேள்வி எழுப்பினாலும் ஸ்ரீலங்காவின் உயர்நிலை அதிகாரிகளே இத்தகைய வதந்திகளை உருவாக்கி வருகின்றனர் என்ற உண்மையால் அரச படையினர் உச்சபட்ச யுத்தமன உளைச்சலுக்குள்ளாகி இருக்கின்றனர் என்கின்றனர் கொழும்பு ஊடகவியலாளர்கள். (து)

# 4 இந்தியத் தமிழர்கள் கண்டியில் கைது !

கண்டியில் 4 இந்தியத் தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கண்டி கடுகல வீதியில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்த ஒரு பெண் உள்ளிட்ட நால்வரையுமே கண்டிப் பொலிஸார் கைது செய்தனர்.

அனைவரும் தமிழகத்தில் இருந்து ஜவுலி விற்பனைக்காக இலங்கைக்கு வந்தவர்கள் என்றும் விசாக் காலம் முடிந்தும் இலங்கையில் தங்கியிருந்தவர்கள் என்றும் கண்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கே.எஸ்.மோகன், கே. நம்பெர், கே.நாகப்பன், எஸ்.கணாச்சி ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் கண்டி நீதிபதி கர்சா சேதுங்கவிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். கொழும்பு குடியேற்றப் பிரிவினரிடம் நால்வரையும் ஒப்படைக்குமாறு நீதிபதி கர்சா சேதுங்க உத்தரவிட்டார்.

மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் மெடிவக இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டார். (க-4,39)

# 6 வாரங்களில் 61 பேரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டின் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்தின் நடுப்பகுதியான கடந்த செவ்வாய் வரை யாழ். குடாநாட்டில் 61 இளைஞர்கள் காணாமல் போயுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டின் முதல் இரு வாரப் பகுதியில் மட்டும் 26 இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். அதில் 14 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டினால் ஒருவர் மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதத்தில் குடாநாட்டில் 35 பேர் காணாமல் போயுள்ளனர். இவர்களில் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட 19 பேரில் 12 பேர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முயற்சியால் விடுவிக்கப்பட்டும் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டும் உள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் 20ஆம் திகதி தென்மராட்சியின் நுணாவில் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் சுமார் 25 நாட்களுக்குப் பின்னர் சாவகச்சேரி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளார்.

முருகதாஸ் தீபரூபன் என்ற அந்த இளைஞர் தற்போது காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அதேபோல் மல்லாகத்தில் கைது செய்யப்பட்ட மற்றொரு இளைஞரான இரத்தினம் ஆனந்தராஜ்(வயது- 33) என்பவர் மல்லாகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இது இவ்வாறிருக்க யாழ். நகரில் நடந்த மரண ஊர்வலம் ஒன்றில் தொடர்ச்சியாக சீன வெடியை வெடித்துச் சென்ற இளைஞர்களை இராணுவத்தினர் மிகக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

யாழ். கோணாவளைப்பகுதியில் கடந்த செவ்வாயன்று நண்பகல் மரண ஊர்வலம் ஒன்றில் இளைஞர்கள் சிலர் வெடிவெடித்துச் சென்றுள்ளனர்.

யாழ். மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள இராணுவக்காவலரண் மீது கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் கைக்குண்டுத்தாக்குதல் நடந்ததால் பீதியடைந்த படையினர் மரண ஊர்வலத்தில் வெடிகொழுத்திச் சென்றவர்களைத் தாக்கியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இராணுவத்தினரின் இத்தகைய தாக்குதலை சற்றும் எதிர்பாராத மரண ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் தலை தெறிக்க ஓட்டம் பிடித்தனர்.

இதனால் சிறிது நேரம் மரண ஊர்வலம் தடைப்பட்டது. பின்னர் ஒரு சிலரோடு மரண ஊர்வலம் மயானத்தை சென்றடைந்தது. மேலும் யாழ்.குடாநாட்டின் தீவுகளில் ஒன்றான அனலைதீவுப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் ஈ.பி.டி.பியினரால் கடந்த செவ்வாய்க்கிழமை கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

அனலைதீவைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான விநாயகமூர்த்தி விநாயகராசா (வயது-40) என்பவரே கடத்தப்பட்டவர் என அடையாளம் கணப்பட்டுள்ளது.

விநாயகமூர்த்தியின் வீட்டிற்கு கடற்படையினருடன் சென்ற ஈ.பி.டி.பியினர் அவரை விசாரணைக்காக அழைத்துச்சென்றதாகக் கூறப்படுகின் றது.

இது தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் விநாயகமூர்த்தியின் குடும்பத்தினர் முறைப்பாடு செய்ய சென்றபோதும் அம்முறைப்பாட்டை பொலிஸார் ஏற்கமறுத்துவிட்டனர். (க-4)

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு

-குறள்

வலம்புரி

# சமாதானத்திற்கான சாத்தியம் குறைவே

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் வருகையை இலங்கை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை இயற்கை அடைந்துள்ள நிலையில் எரிக்சொல்ஹெய்மின் வருகைக்கு இருக்கக்கூடிய முக்கியத்துவம் உயர்வானதாக இருக்கும்.

2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை முதல் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம் பெற்ற ஆறு சுற்றுப் பேச்சுக்கள் வரை எந்தவித முன்னேற்றத்தையும் தரவில்லை.

ஐந்து வருடாங்கள் கடந்து விட்டநிலையில் சமாதானத்திற்கான சாத்தியப்பாடுகள் சரிவராதபோது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சமாதானத்திற்கான முன்னேற்பாடுகள் நடக்குமா? என்ற கேள்வியையும் புறந்தள்ளிவிட முடியாது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக யுத்தத்தை சந்தித்த தமிழ் மக்கள் மீண்டும் ஓர் யுத்தத்தை சந்திக்கத் தயாராகி விட்டனரா? என்ற வாதப் பிரதிவாதங்கள் தென்னிலங்கைப் புத்திஜீவிகளிடம் எழுந்துள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை, அதன் பின்னணியாக இடம் பெற்ற சமாதான பேச்சுக்கள் எவையும் ஆரோக்கியமானதாக அமையாத காரணத்தால் சமாதான சூழ்நிலை நிரந்தரமாக ஏற்படும் என்ற நம்பிக்கை எவரிடமும் இருந்திருக்க முடியாது.

இதனை மேலும் உறுதி செய்வதாக நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் அமைந்தது. யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீளாய்வு செய்தல், பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை இரத்துச் செய்தல், நோர்வேயின் அனுசரணைப் பணியை இடைநிறுத்துவது ஆகிய மகிந்தவின் சிந்தனை வடிவம், மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் என்ற கதையாகிவிட்டது.

உலக நாடுகளின் ஆலோசனைகள், நிதியுதவிகள் என்பவற்றினைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை அரசு சமாதான விருப்புடையதாக நடித்துக் கொள்கின்றது. ஆனால் மறைமுகத்தில் போருக்கான ஆயத்தங்களை செய்து வருகின்றது.

சமாதானம் என்பதற்கப்பால் ஆட்சிப்பீடத்தை கைப்பற்றுதல் என்ற விடயமே தென்னிலங்கையில் மேலோங்கியிருப்பதால் சமாதானத்திற்கு ஊறுவிளைவிக்கக் கூடிய எதனையும் செய்வதற்குப் பிரதான கட்சிகள் தயாராக இருந்தன-இருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தார்.

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதன் மறுபக்கம் சமாதானத்தை முன்னெடுக்க முடியாது என்பதாகஇருந்த போதிலும் சந்திரிகா குமாரதுங்க அதுபற்றி இம்மியும் அலட்டிக் கொள்ளவில்லை.

ஈற்றில் விடுதலைப்புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையைச் செய்த போது அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொண்டு ஜே.வி.பி. வெளியேறியது.

ஓர் சாதாரண உடன்படிக்கைக்கே இப்படி என்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது ஜே.வி.பியின்எதிர்ப்பு எப்படியிருக்கும் என்பதை அனுமானிக்க முடியும்.

ஆக, யார்தான் சமாதானப் பேச்சை முன்னெடுக்க முயன்றாலும் பேரினவாத சக்திகள் அதற்கு ஒரு போதும் இடம் தரப் போவதில்லை என்பது உறுதி.

# தமிழ் மக்களின் கொலைப் பின்னணியில் படையினர் சம்பந்தப்பட்டுள்ளார்கள்-இரா.சம்பந்தன்

படையினரின் மறைமுகமான உதவியுடனேயே தமிழ் மக்கள் கொல்லப்படுகின்றார்கள். ஆனால் படையினர் அதனை மறுத்துவிடுகின்றனர்.

எவ்வாறாயினும் தமிழ் மக்களை படுகொலை செய்யும் நபர்களையும் அதற்கு உடந்தையாக உள்ளவர்களையும் அரசு உடனடியாக கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாணவர்கள் படுகொலையின் பின்னணியில் யார் உள்ளனர் என்பது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்கணலின் போதே இதனைத் தெரிவித்தார். தமிழர் பிரதேசங்களில் பல படுகொலைச் சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால் இந்த சம்பவங்களில் தொடர்புடைய எவருமே நீதியின் முன்னால் நிறுத்தப்பட்டதில்லை.

இந்தப் படுகொலைகள் தொடர்பில் அரசாங்கத்தின் சார்பில் நாடாளுமன்றில் வெறும் அறிக்கைகளும் வாக்குறுதிகளும் தரப்படுகின்றனவே தவிர எந்த ஒரு தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

அப்படியான நடவடிக்கைகள் கூட கேள்விக்குரியனவாக இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லவே நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினோம்.

பெருந்தொகையான தமிழர்கள் காணாமல் போயுள்ளனர். எதுவித காரணமும் இல்லாமல் வடக்கு-கிழக்குப் பிரதேசத்திலும் நாட்டின் இதர பகுதிகளிலும் குறிப்பாக கொழும்பிலும் தமிழர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

அரசாங்கத்தின் இந்தச் செயற்பாட்டைக் கண்டிக்கும் வகையில் எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கத்தில் நாம் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டோம். இது தொடர்பிலான கேள்விகளை எழுப்பி நாடாளுமன்றில் விவாதிக்க அனுமதி கோரினோம். எமக்கு நீதி வழங்கப்படாத நிலையில் நாம் நாடாளுமன்றத்துக்குள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை மூன்று நாட்களாக நடத்தினோம்.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் சித்திரவதைகளுக்குள்ளாகமால் இருப்பதற்கான உறுதியான நடவடிக்கையையே அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

தமிழ் மக்களுக்கு எதிரான இந்தச் செயற்பாடுகளை உடனே முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதையே அரசாங்கத்தினது உடனடி நடவடிக்கையாக நாம் எதிர்பார்க்கிறோம். மக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதால் இந்த வன்முறைகளுக்கு அரசாங்கமே பொறுப்பு என்பதை ஏற்கவேண்டும்.

அரச படையினர் கொல்லப்படுதல் தொடர்பில் நாம் வருத்தப்படுகிறோம். ஆனால் இந்தக் கொலைகளுக்கும் இலங்கை அரசாங்கம்தான் பொறுப்பாக வேண்டும்.

திருகோணமலை மாணவர்களின் படுகொலைக்குப் பின்னால் ஐக்கிய தேசியக் கட்சியினரது தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறது. ஆனால் நாம் 5 தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்ட விடயத்தை அரசியலாக்க விரும்பவில்லை. இந்தப் படுகொலைகள் தொடர்பில் எம்மிடம் கருத்து தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இராணுவத்தினரது ஒரு பகுதியினர்தான் இந்தப் படுகொலைகளுக்குக் காரணம் என்றார். எந்த ஒரு படையினரும் சம்பவம் நடந்த பகுதியில் தாக்குதலுக்குள்ளாகாத நிலையில் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தப் படுகொலை ஒரு திட்டமிட்ட படுகொலை. இந்தப் படுகொலை தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு குற்றவாளிகளை நீதியின் முன்பாக நிறுத்த வேண்டும். மாணவர்களின் படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டால் தடயவியல் நடவடிக்கை மூலம் குற்றவாளிகளை கண்டு பிடித்துவிடமுடியும்.

இதேவேளை எமது நடவடிக்கைகள் தொடர்பில் விமர்சனம் செய்கிற தகுதியும் அருகதையும் ஜே.வி.பிக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இல்லை.

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது இந்த இரு கட்சிகளும் மேற்கொண்ட செயற்பாடுகளை நினைவுபடுத்திப்பாருங்கள். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான ஒரு கட்டமைப்பு அது. அவ்வளவுதான். இதே சமயம் நாங்கள் விடுதலைப்புலிகளின் நிழல் பிரதிகள் அல்ல. தமிழ் மக்களின் நலன்களுக்காக, அவர்களது எதிர்காலத்துக்காக அமைதி முயற்சிகள் அர்த்த முள்ள வகைகளில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இணைந்து செயற்படுகிறோம். தற்போதைய அமைதி முயற்சிகள் பின்னடைந்துள்ளமைக்கு ஜே.வி.பி.தான் பொறுப்பேற்கவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா காலத்திலும், ரணில் பிரதமராக இருந்த காலத்திலும், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகயிருந்த இப்போதும் அமைதி முயற்சிகளுக்குத் தடை போடுகிறவர்கள் ஜே.வி.பியினர் என்பதால் அவர்களே இதற்குப் பொறுப்பு. அவர்கள்தான் நாட்டை இந்த ஆபத்தான நிலைக்குத் தள்ளியவர்கள்.

எம்மைப்பொறுத்தவரையில் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதில் அரசாங்கங்களோடும் அரச தலைவர்கள் மற்றும் பிரதமர்களோடும் ஒத்துழைத்து வருகிறோம். அமைதி முயற்சிகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும் என்று நாடாளுமன்றில் வலியுறுத்தி வருகிறோம். இந்த விடயம் தொடர்பாக சர்வதேச சமூகத்துடன் நாம் விவாதித்துள்ளோம். நாம் எம்மாலான ஆகக் கூடிய பணிகளை சரியாகவே செய்துள்ளோம். நாம் ஒரு ஜனாநாயக ரீதியான அரசியல் கட்சியினர். வடக்கு கிழக்கு மக்களினால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் நாங்கள். எம்மால் முடிந்த ஆகக் கூடிய பணிகளைச் சிறப்பாகச் செய்துள்ளோம். தமிழீழ விடுதலைப்புலிகளை குறை கூறுவதில் எந்த அர்த்தமும் இல்லை. ஆயுதக் குழுக்கள் தோன்றாத காலத்திலே அரசியல் தலைவர்கள் தீவிரமாக செயற்பட்ட காலத்திலே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்க முடியும்.

ஆயுதக் குழுக்கள் உருவான பின்பும் கூட முன்னைப் போலவே அளிக்கப்பட்டவாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. தற்போதும் அது தான் நடந்து கொண்டிருக்கிறது. இதுவே உண்மை.

ஆழிப்பேரலை பொதுக்கூட்டமைப்பு நிராகரிக்கப்பட்டமை உதாரணமாகும். எனவே அரசாங்கம் உடனடியாக பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும். நாங்கள் அதற்கு உதவ தயாராக உள்ளோம் என்றார்.

(க-7)

# ஈழத்தமிழர்கள் அகதிகளாக செல்வதற்கு அரசாங்கம் பொறுப்பல்ல-ரிஷாட் பதியுதீன்

தமிழகத்துக்கு ஈழத் தமிழர்கள் அகதிகளாகச் செல்வதற்கு அரசாங்கம் பொறுப்பில்லை என்று மீளக்குடியேற்றத் துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

நாட்டிலிருந்து இடம்பெயர்வோர் தமது சொந்த விருப்பத்தின் பேரிலே இடம்பெயர்கின்றனர். அவர்கள் அகதிகளாக இருந்துவிட்டு திரும்பிய பின்னர் மீளச் செல்வதற்கு அரசாங்கம் பொறுப்பில்லை.

வெளிநாடுகளில் அகதிகளாக இருந்து திரும்பியோரை மீளக் குடியேற்றும் பணிகள் தொடங்கியுள்ளன. மீளக் குடியேறுவதற்கானநிதிஒதுக்கீடுசெய்தபின்னர் அவர்கள் குடியேறுதல் தொடர்பில் அரசாங்கம் பொறுப்பேற்காது. நான்கு ஆண்டுகளுக்குள் மீளக் குடியேற்றத் திட்டங்களைச் செயற்படுத்தும்ஜனசவியதிட்டத்தை அரசாங்கம் தொடங்கியுள்ளது.

யுத்தத்தால் பாதிப்படைந்து அகதிகளாகச் சென்றவர்கள் மீள நாடு திரும்பும் போது அவர்களின் வீடுகள் புனரமைக்கப்படுதல் உள்ளிட்டவைகளுக்காக ரூ. 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்களது வர்த்தகங்களை மீளத்தொடங்க மேலும் ரூ. 1இலட்சத்து50ஆயிரம் அளிக்கும் யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்நாட்டில் 39 ஆயிரம்பேர் இடம்பெயர்ந்துள்ளனர். வெளிநாடுகளில் அகதிகளாக 1 இலட்சத்து 24 ஆயிரம் பேர் அடைக்கலம் கோரியுள்ளனர் என்றார்.

(து)


# கொக்குவில் பகுதியில் தடைப்படும் மின்சாரம்

## மக்கள் மத்தியில் விசனம்

கொக்குவில் பகுதியில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அண்மைய நாட்களாக முன்னிரவு வேளைகளில் தடைப்படும் மின்சாரம் நள்ளிரவைத் தாண்டிய பின்னரே சீர்செய்யப்படுகின்றது. இதனால் அவ்வேளைகளில் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. அண்மைய நாட்களாக திருடர்களின் தொல்லை மற்றும் இராணுவ ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதானது மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கபடுகின்றது. இது குறித்து உரிய தரப்பினர் சீரான மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாவனையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ச)

## தினசரி தியானம்
## விவேகச் சிந்தனைகள்



பொய்மைக்கும் ஒழுங்கீனங்களுக்கும் அடிமைப்பட்டிருப்பது மாயை வாழ்க்கை. மாயை வாழ்க்கையில் அழுந்தியிருக்கும் அளவுக்கு ஒருவன் இறைவனை மறந்து விடுகின்றான். அதிக செல்வம், செருக்கு, அதிகாரம், ஆடம்பரம் போன்ற மாயை வாழ்க்கை ஒருவனை இறைவனை மறக்கும்படி செய்கின்றது.

# பேச்சுமூலம் தீர்வு காண்பதற்கு அரசு தொடர்ந்தும் முட்டுக்கட்டை

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

பேச்சுமூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் முட்டுக்கட்டையாக இருப்பதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான நேரடிப் பேச்சுக்களை நோர்வேயில் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் மீண்டும் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. இதன்மூலம் தமிழ் மக்கள் மீது மீண்டுமொரு யுத்தத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நாட்டம் கொண்டுள்ளது.

சர்வதேச சமூகத்தை ஏமாற்றி, யுத்தத்தினை ஆரம்பிக்க அரசு தருணம் பார்த்திருப்பதாகவே நாம் கருதுகிறோம் என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு அனுசரணைப் பணியை மேற்கொள்ளும் நாட்டை இருபகுதியினரும் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே அவர்கள் அனுசரணைப் பணியை மேற்கொள்ளமுடியும். எனினும் அரசாங்கமும், அதனுடன் கூட்டுச்சேர்ந்துள்ள கட்சிகளும் நோர்வேயின் அனுசரணைப் பணியை விமர்சித்துள்ளன.

இது இலங்கை அரசின் சமாதான முயற்சிகளின் அக்கறையீனத்தைக் காட்டுகின்றது. இதன் ஒரு எடுத்துக்காட்டாகவே நோர்வேயில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கும் அரசு பின்னடித்து வருகின்றது.

இலங்கையில் ஏற்படப்போகும் கொடிய யுத்தத்தைக் கருத்திற்கொண்டு சமாதான முயற்சிகளை இதயசுத்தியுடன் மேற்கொள்ளாதுவிடின் முழு இலங்கைத் தீவும் பாரிய அழிவைச் சந்திப்பதை தடுக்கமுடியாது போகுமென பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இந்திய பாதுகாப்பு ஆலோசனைசபை பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

இந்திய பாதுகாப்பு ஆலோசனை சபை பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்று கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

அலரி மாளிகைளில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இந்திய பாதுகாப்பு ஆலோசனை பிரதிநிதி என்.கே.ராஜ்கோத்திராவுடன், சென்னை ஐ.ஏ.ரி. உறுப்பினர் பேராசிரியர் பி.வி.இந்திரேசனும் கலந்துகொண்டுள்ளனர். (க-39)

## நேர்முகப் பரீட்சையை தவறவிட்டோருக்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆங்கில மொழிமுலம் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களிற்கு விண்ணப்பித்து நில்வள (அங்குரஸ்ச) சியன கல்வியியற் கல்லூரிகளுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக் கடிதம் கிடைத்தும் அங்கு செல்லமுடியாதவர்களும், செல்லத் தவறியவர்களும் இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஒன்றுகூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குச் செல்லமுடியாதவர்களுக்கு மீண்டுமொரு தடவை நேர்முகப் பரீட்சையை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்வது குறித்து கலந்துரையாடுவதற்காகவே அவர்களை இன்று காலை ஒன்றுகூடுமாறு அழைக்கப்பட்டுள்ளது. (ச)

## யாழ்ப்பாணத்தில்...

தங்குமிடங்கள் என்பவற்றை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்குகின்றது.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மட்டுமே வழங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## பதுங்கியிருந்து...

அடுத்து தமன காட்டுப் பகுதியில் கிளைமோர் குண்டுகள்- 8 மற்றும் ரி.56 ரக துப்பாக்கி ரவைகள்-369, எம்.பி .எம்.ஜி துப்பாக்கி ரவைகள்-370 உட்பட சில வெடிபொருட்களை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## வி.பி. கிண்ணத் தொடர்

# அவுஸ்திரேலிய அணியை இலங்கை அணி வென்றது

(சிட்னி)

வி.பி. கிண்ணத்திற்கான முக்கோண ஒருநாள் போட்டித் தொடரின் 5 ஆவது ஆட்டத்தில் இலங்கை அணி 51 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணியை வெற்றிகொண்டது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுத்தாடிய இலங்கையணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 309 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கையணியில் சனத் ஜெயசூரியா 114 ஓட்டங்களையும், சங்ககார, மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் முறையே 78, 56 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் மலிங்க பண்டார 4விக்கெட்டுக்களையும், ருச்சிர பேரேரா 2 விக்கெட்டுக்களையும், சமிந்தவாஸ், முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

அவுஸ்திரேலிய அணியில் மைக்கல் கிளார்க் 62 ஓட்டங்களையும், கொப்ஸ், கட்டின் ஆகியோர் முறையே 43,41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிறாக்கென் 2 விக்கெட்டுக்களையும், பிரட்லீ, சைமன்ஸ், கொக், கிளார்க் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

நேற்றைய போட்டியின் அடிப்படையில் அவுஸ்திரேலிய அணி 10 புள்ளிகளுடனும், இலங்கையணி 9 புள்ளிகளுடனும், தென்னாபிரிக்க அணி 4புள்ளிகளுடனும் தொடரில் உள்ளன. (ச)

## நுவரெலியா...

யிடப்பட்டதாகவும் நீதிமன்றத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் நுவரெலியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவேளை நேற்று முற்பகல் 10 மணி முதல் 12 மணிவரை நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது சந்தேகத்திற்கிடமான 53 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹட்டன் தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் சானக்க டி சில்வா தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறிய வடக்குக் கிழக்கை சேர்ந்த சிலரும் அடங்குவதாகவும் அவர் மேலும் கூறினார்.

அத்துடன் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு தலைமறவாகியிருந்த சிலரும், போக்குவரத்து விதிகளை மீறிய சிலரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைவிட வாகன அனுமதிப் பத்திரம் இல்லாத நான்கு ஆட்டோ வண்டிகளும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஹட்டன் தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் கூறினார். (ச)

## போர்நிறுத்த...

உரியமுறையில் நீடிப்பதற்கு சகல தரப்பினரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார் ரணில் விக்கிரமசிங்க.

அரசியல் லாபத்திற்காக எவராவது போர்நிறுத்த ஒப்பந்தத்தில் பாதிப்பை ஏற்படுத்த முயன்றால் அதை அனுமதிக்கமுடியாது என்றும் தெரிவித்துள்ளார். (க-9)

## பாலா- எரிக் சொல்ஹெய்ம்...

வேலுப்பிள்ளை பிரபாகரனை இன்று மாலை சந்தித்து சமாதான முயற்சிகள் தொடர்பாக முக்கியமாக கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நாளை காலை ஜனாதிபதி மகிந்தவை விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் சந்தித்துக் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இச் சந்திப்பில் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கான ஐந்து நாடுகளின் பெயர்ப்பட்டியலை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்காக ஜனாதிபதி மகிந்த சொல்ஹெய்மிடம் கையளிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை எதிர்வரும் புதனன்று வன்னி செல்லும் எரிக்சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இச் சந்திப்பில் சமாதான பேச்சுவார்த்தைகளை சுவிஸ் தலைநகர் ஜெனிவாவில் நடத்தலாம் என்றும் அனுசரணையாளராகிய எரிக் சொல்ஹெய்ம் தெரிவிக்கக்கூடும் எனக் கூறப்பட்டது.

இதேவேளை அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் வருகையை முன்னிட்டு கட்டுநாயக்க விமான நிலையத்தில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவர் கட்டுநாயக்காவுக்கு வந்தவுடன் உடனடியாக ஹெலிகொப்டர் மூலம் வன்னி புறப்படவுள்ளார். அவர் பயணிக்கும் ஹெலியில் விசேட பிரதிநிதிகளும் பிரயாணம் செய்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## நேரடிப் பேச்சுக்கு....

தான் ஜனாதிபதியாக பதவியேற்றவுடனேயே தாக்குதலை விடுதலைப் புலிகள் ஆரம்பித்துவிட்டார்கள் என்றும், தனக்கு மூச்சுவிடக்கூட கால அவகாசம் வழங்கவில்லையென அசோசியேட்டெட் பிறஸ் செய்தி ஸ்தாபனத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே ஜனாதிபதி மகிந்த விடுதலைப் புலிகள் மீது பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாம் வலிமையான இராணுவத்தை பெற்றுள்ளோம். நாம் பொறுமையாக இருப்பதாலேயே எம்மைப் பலவீனமானவர்களாக கருதக்கூடாது. இருப்பினும் பேச்சுக்களின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியும் என நாம் திடமாக நம்புகிறோம். இனங்களின் பெயரால் விடுதலைப் புலிகள் விரும்புவதைப்போல் இம்மக்கள் பிளவுபடுவதை நாம் விரும்பவில்லை. இருதரப்பு நம்பிக்கையை வளர்த்தெடுக்க அமைதிப் பேச்சுக்களை நாம் தொடங்கமுடியும்.

அதற்கு முன்னதாக இந்த படுகொலைகளைத் தடுத்து நிறுத்துதல் எப்படியென்பது தொடர்பாக நாம் விவாதிக்க வேண்டும். இதுவரை விடுதலைப் புலிகளால் 78 இராணுவத்தினர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இது ஆகக்கூடியதான தொகை. இதை அவர்கள் உடனே நிறுத்தவேண்டும்

விடுதலைப் புலிகள் எங்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். நாம் அனைவரும் இலங்கையர். இந்த சிறியநாடு மீண்டும் யுத்தத்திற்குச் சென்றுவிடக்கூடாது.

நாம் மூச்சுவிடக்கூட விடுதலைப் புலிகள் எமக்கு நேரம் அளிக்கவில்லை. நாம் பதவியேற்றவுடனேயே தாக்குதல்களைத் தொடக்கி விட்டார்கள். பேச்சுக்கள் தொடங்கும்போது இப்படுகொலைகளும் நிறுத்தப்பட்டுவிடும். இதன்மூலம் தற்போதைய பிரச்சினைகள் ஒவ்வொன்றிற்கும் தீர்வுகாணப்படும்.

எங்களுக்கோ, அவர்களுக்கோ யாரும் அழுத்தம் கொடுக்க இயலாது. இந்த அமைதிப் பேச்சுக்கள் தொடர்பில் நான் நீண்ட நேரம் செலவழித்து வருகிறேன். அது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

இதனடிப்படையில் விடுதலைப் புலிகளை உடனடியாக பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்புவிடுக்கிறேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ச-4)

குளிரூட்டிய நவீன கார் வாடகைக்கு

- திருமணம் (சோடனையுடன்)
- சுற்றுலா
- விசேட வைபவங்கள்



போன்ற அனைத்துத்தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
22,சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி ,யாழ்ப்பாணம்

T.P: 0777- 903090
0777-246117
077-9172730










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.